சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ
சிவசிவ
செந்திலாண்டவன் துணை

# செயங்கொண்டார் வழக்கம்

[ குறிப்புரையுடன் ]

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள்

15-வது ஆண்டு நினைவு மலர்

9—4—1959

இலவச வெளியீடு

[திருப்பனந்தாள்

சிவ சிவ சிவ சிவ சிவ

T14626
R005D05
T.14626

உ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்

# திருமுறை வெளியீடுகள்

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| 1 | விநாயகர் திருமுறை ... ... ... | 0 | 06 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் ... | 6 | 00 |
| 3 | சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்... ... | 3 | 00 |
| 4 | திருஞானசம்பந்தர் தேவாரம்(மூலம்மட்டும்)... | 2 | 50 |
| 5 | திருநாவுக்கரசர் தேவாரம் ,, ... | 2 | 25 |
| 6 | சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ,, ... | 1 | 30 |
| 7 | திருவாசகம் (புதிய பதிப்பு) ,, ... | 0 | 60 |
| 8 | திருக்கோவையார் - பேராசிரியர் உரையுடன்... | 2 | 00 |
| 9 | ஒன்பதாந் திருமுறை - திருவிசைப்பா திருப்பல்லாண்டு (மூலம்மட்டும்) ... | 0 | 56 |
| 10 | திருமந்திரம் ,, ... | 2 | 50 |
| 11 | பதினோராந் திருமுறை ,, ... | 1 | 25 |
| 12 | அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு) ... | 0 | 25 |
| 13 | திருக்கைலாய ஞானவுலா - உரையுடன் ... | 0 | 50 |
| 14 | பெரிய புராணம் (மூலம் மட்டும்) ... | 2 | 50 |
| 15 | அகத்தியர் தேவாரத் திரட்டு ... ... | 0 | 37 |
| 16 | திருவிளையாடற் புராணம் (மூலம் மட்டும்) ... | 3 | 00 |
| 17 | தாயுமானவர் சுவாமிகள் பாடல் - குறிப்பு உரையுடன் ... | 1 | 25 |
| 18 | கந்த புராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) ... | 1 | 75 |
| 19 | கந்தபுராணம் முதல்மூன்று காண்டங்கள் ,, ... | 2 | 75 |
| 20 | ,, யுத்த தேவகாண்டம் ,, ... | 2 | 00 |
| 21 | ,, தக்ஷகாண்டம் ,, ... | 1 | 50 |
| 22 | கந்தபுராண வசனம் ... | 2 | 50 |
| 23 | கந்தர் அலங்காரம்—குறிப்புரையுடன் ... | 0 | 25 |
| 24 | கந்தரனுபூதி ... | 0 | 13 |
| 25 | கந்தர் கலிவெண்பா-மூலம் மட்டும் ... | 0 | 06 |
| 26 | கந்தர் கலிவெண்பா, மூலமும் உரையும் ... | 0 | 37 |
| 27 | நீதிநெறி விளக்கம்- ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன் ... | 0 | 50 |
| 28 | சகலகலாவல்லிமாலை- ஆங்கிலமும் ஹிந்தியும்... | 0 | 06 |

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து இலவச வெளியீடு:

உ
சிவ சிவ
செந்திலாண்டவன் துணை

# செயங்கொண்டார் வழக்கம்

[ குறிப்புரையுடன் ]

❋

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
அவர்கள் ஆணையின் வண்ணம் வெளியிடப்பெற்றது.

T014626
Sarasvati Mahal Library. Thanjavur

❋

ாசிரியர் :
திரு. *T. M.* குமரகுருபரன் பிள்ளை B. A., B. L. அவர்கள்
நிரந்தரத் தலைவர், ஸ்ரீ குமரகுருபரன் சங்கம்,
ஸ்ரீவைகுண்டம்

9—4—1959

ஸ்ரீகாசிமடம் ] [ திருப்பனந்தாள்

உ

சிவ சிவ

**சிவநாமம்**

**சிவசிவ என்கிலர் தீவினை யாளர்;**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளும்;**
**சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்;**
**சிவசிவ என்னச் சிவகதி தானே.**

—திருமந்திரம்

❋

இப்புத்தகம் வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிகளுக்கு ந. ப. 11 (பதினொரு நயா பைசா) அஞ்சல்தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்:

1. **திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை** B. A., B. L.
நிரந்தரத் தலைவர், ஸ்ரீ குமரகுருபரன் சங்கம்,
ஸ்ரீவைகுண்டம்.
(திருநெல்வேலி ஜில்லா)

2. **திரு. க. சுப்பிரமணிய அய்யர்** B. A.
தியாகராச விலாசம்,
53, பிள்ளையார் கோவில் தெரு,
திருவேட்டீஸ்வரன் பேட்டை
திருவல்லிக்கேணி, சென்னை-5.

ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி-8.

உ
சிவ சிவ

# முன்னுரை

உலக மக்கள் நாளடைவில் பழக்கவொழுக்கங்களில் கண்டறிந்த அனுபவங்களைக் கைக்கொண்டு அதனை ஒரு வாசகமாக வழங்குகின்றனர். அதனைத்தான் உலக வழக்கு அல்லது வழக்கம் என்பர். இவ் வழக்கம் பின்னர்ப் புலவர் பெருமக்களால் பழமொழி, முதுமொழி என வழங்கப் பெறுகின்றது. இம் முறையிலே இதிகாச புராண வரலாற்றுக் கதைகளை மேற்கோளாகக் கொண்டு பழமொழி வாக்கியங்களை ஈற்றில் பெற்று, நேம நகரில் எழுந்தருளிய இறைவனாகிய செயங்கொண்டாரை முன்னிலைப்படுத்தி நூறு விருத்தப் பாவால் அமையப் பெற்றது செயங்கொண்டார் வழக்கம் என்னும் இந்நூலாகும். இது பழமொழி நானூறு, தண்டலையார் சதகம் போன்றது; அரிய அனுபவங்களை அங்கை நெல்லிக் கனிபோல் விளக்குவது; மக்கள் பண்பாட்டின் வாழ்க்கை நெறியைக் காட்டுவது. இந்நூலினைத் தமிழ் மக்கள் கற்று அறிந்து பயனடைய வேண்டும் என்ற அருள் நோக்கம் கொண்டு, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவுளம்பற்றினார்கள். அதன்படி செயங்கொண்டார் வழக்கம்என்ற இந்நூல் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்களின் 15-வது ஆண்டு நினைவு மலராக விளம்பி ஆண்டு பங்குனித் திங்கள் 27-ஆம் நாள் (9—4—59) ஆகிய இந்நன்னாளில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் இலவச வெளியீடாக வெளிவருகின்றது.

இவ் வெளியீடு அரசியலார் ஏட்டுச் சுவடி நூல் நிலையத்து (Madras Government Oriental Manuscripts Library) 586 - ஆம் எண்கொண்ட செயங்கொண்டார் வழக்கம் என்ற கையெழுத்துச் சுவடியை ஆதாரமாகவும், 1914 - ஆம் ஆண்டில் மதராஸ் ரிப்பன் அச்சகத்தில் அச்சிட்ட செயங்கொண்டார் சதகம் என்ற நூலையும், வேறு ஒரு பழைய சுவடியையும் துணையாக வைத்துக்கொண்டும் செய்யுட் பகுதிகளை ஆராய்ந்து செப்பம் செய்து வெளியிடப்

பெற்றதாகும். ஒவ்வொரு செய்யுளிலும் கண்ட பாடபேதங்களும் தேவையான குறிப்புரையும், புராண வரலாறுகளும் ஆங்காங்கே அமைக்கப்பெற்றுள்ளன. இந்நூல் மக்கள் வாழ்க்கைக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகும்.

சைவத்தோடு தமிழையும் நாளும் தம் இரு கண்களெனப் பாதுகாத்து வருவதுடன் சுமார் அரை கோடி ரூபாய்கட்குமேல் முதலீடு வைத்துப் பற்பல நல்லறங்களையும் வழங்கிப் பரிபாலித்து வரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் இந்நூலையும் இலவச வெளியீடாக வெளியிட்டு வழங்கிய அருட் கொடையினைத் தமிழுலகம் என்றும் மறவாது போற்றற்குரியதாம்.

இந் நூலைச் செவ்விய முறையில் பல பிரதிகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து ஆங்காங்கே பாடபேதங்களைக் காட்டிக் குறிப்புரை வழங்கி நன் முறையில் அச்சிடுதற்கு உதவிய திருச்சிராப்பள்ளி வித்துவான் திருமுறைக் கலைஞர் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கட்குச் செந்திலாண்டவன் திருவருள் என்றும் பாலிப்பதாக. இந்நூலின் செய்யுட்களை அச்சிடுதற்கு உரிமை வழங்கிய சென்னை அரசியலார் ஏட்டுச்சுவடி நூல்நிலையப் புரப்பாளர் உயர்திரு. T. சந்திரசேகரன் M. A., L. T., அவர்கட்கு என் நன்றி என்றும் உரியதாகும். இந்நூலிற் கண்ட வரலாறுகளெல்லாம் "செயங்கொண்டார் வழக்கம்" என்னும் சென்னை அரசாங்க வெளியீட்டில் விரிவாக எழுதப் பெற்றுள்ளன. அங்குக் காண்க.

இச்சிறு நூல் வெளியீட்டை வெளியிடும் தொண்டினை அடியேனுக்குத் திருவருள் பாலித்த ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கட்கும், அவர்கள் அருள்வழியொழுகும் ஸ்ரீ காசிமடம் இளவரசு ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கட்கும் அடியவனின் வந்தனை வழிபாடுகள் என்றும் உரியனவாகும்.

இங்ஙனம்,

ஸ்ரீவைகுண்டம்
9—4—1959

**T. M. குமரகுருபரன் பிள்ளை,**
நிரந்தரத் தலைவர், ஸ்ரீ குமரகுருபரன் சங்கம்.

உ

சிவ சிவ

# நூலாசிரியர் வரலாறு*

செல்வம் யாவும் செழித்தோங்கும் மதுரை மாவட்டத்துச் சிவகங்கை சமஸ்தானத்தைச் சார்ந்த கீழைச் சேவற்பட்டி என்னும் ஊரில் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில் அழகப்பச் செட்டியார் என்பவரின் அருந்தவப் புதல்வராய்த் தோன்றியவர் இந்நூலாசிரியரான முத்தப்பச் செட்டியார் ஆவர். இவர் இளையாற்றங்குடி முதலிய ஏழுநகரத்தார் கோயில்களில் ஒன்ருன நேமம் கோயிலைச் சேர்ந்தவர்; குன்றக்குடி முருகப்பெருமானிடத்து நீங்காத அன்பும் பக்தியும் பூண்டவர்.

முத்தப்பச் செட்டியார் இளமையிலே கணக்காயர் ஒருவரிடம் தமிழ் நெடுங்கணக்கைப் பயின்று பின்னர் நிகண்டு இலக்கணம் முதலிய கருவி நூல்களையும், நைடதம், பாரதம், இராமாயணம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் முதலிய இலக்கியங்களையும், திருக்குறள் முதலிய நீதி நூல்களையும் நன்கு கற்றுணர்ந்தார்; கவிபாடும் வல்லமையும் பெற்றுத் திகழ்ந்தார். அதனுல் அவர் பாடுவார் முத்தப்பச் செட்டியார் எனப் பெயர் பெறலானுர். அப்போது இவர்க்குச் சிவகங்கையைச் சார்ந்த ஊனை நகர் (ஊனையூர்) ஆண்டி வீடு வீரபண்டாரம் குமாரன் சுப்பிரமணிய பண்டாரம் என்பவரும், அந்தணர் குலத்தவரான ஊனைநகர் பாரதியார் என்பவரும் சிறந்த நண்பர்களாகத் திகழ்ந்தனர்.

செட்டியார் நுண்ணறிவும் நற்குணமும், நல்லொழுக்கமும், கடவுட் பக்தியும், வாக்கு வன்மையும் பெற்று விளங்

---

* இஃது அமராவதிபுதூர் உயர்திரு ராய. சொக்கலிங்கச் செட்டியார் அவர்கள் கூறிய குறிப்பைக் கொண்டு எழுதப் பெற்றது.

கியவர். இவரது வாழ்க்கைத் துணைவியாரும் சகலநற்குணங் களும் வாய்ந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தியவர்.

" ஏடும்புண் ணுகி எழுத்தாணி யுந்தேய்ந்து
பாடு மனமும் பரதவித்தே — ஏடெழுதிச்
சுண்டுவிர லுங்காய்த்துத் தொண்டைகம்மல் பாடியதால்
கண்டதல்லா லோர்பலனுங் கண்டிலேன் "

என்ற திருமுக விலாசக் கண்ணிகளால் இவரது வருவாய் இல்லாத வாழ்க்கை ஒருவாறு அறியக் கிடக்கிறது.

ஒரு சமயம் நகரத்தார் தாங்கள் என்றும் செல்வத்துடன் திகழவேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்கி, இவர்,

" காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேல்வணிகர் — வீடுகட்டு
அன்றைக்கு வந்தளங்கள் அம்மா ! இலக்குமி ! நீ
என்றைக்கும் நீங்கா(து) இரு"

என்ற ஒரு வெண்பாவைப் பாடியதாகவும் தெரிகின்றது.

பாடுவார் முத்தப்பச் செட்டியார் ஊனை நகர் வீ. சுப்பிரமணிய பண்டாரம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, செயங்கொண்டார் வழக்கம் என்னும் நூலும், ஏழு நகரத்தார் பெயரால் திருமுக விலாசம் என்னும் நூலும் இயற்றினர் என்பவர். திவ்விய தேச யாத்திரையின் சரிதம் என்ற ஒரு நூல் இவர் எழுதியதாகவும் கூறுவர். இவர் பற்பல சமயங்களில் பல தனிக் கவிகளும் பாடி மக்களை மகிழ்வித்ததுண்டு.

இவரது காலம் இற்றைக்கு ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் என்பர்.

———*———

உ

சிவமயம்

# தனிப்பாடல்

### நேரிசை வெண்பா

ஓங்குபத்மா சூரனைக்கண் டோடியொளித் தார்;விசையன்
வாங்குதனு வால்பூசை வாங்கினர்; — ஈங்கிருக்கும்
நன்னேமச் சோழீச ஞர்செயங்கொண் டார்என்ருல்
என்னசெயங் கொண்டார் இவர் ?

இஃது ஊஊநகர் பாரதியார் என்பவர் முத்தப்பச் செட்டியாரை வினவும் வினவாக இயற்றிய செய்யுள்.

---

### நேரிசை வெண்பா

என்னசெயங் கொண்டார் இவரென்ருல் ? முப்புரத்தைச்
சொன்னமய மாச்சமைத்த சோழீசர்—பின்னுஞ்
சிரித்துச் செயங்கொண்டார்; சித்தசனைக் கண்ணுல்
எரித்துச் செயங்கொண்டா ரே.

இஃது ஊஊநகர் பாரதியார் வினவிற்கு விடையாக முத்தப்பச் செட்டியார் இயற்றிய செய்யுள்.

---

உ

கடவுள் துணை

செயங்கொண்டார் வழக்கத்தின்

# சிறப்புப்பாயிரம்

சுந்தர முதலியார்

பாடியது

அறுசீர் ஆசிரிய விருத்தம்

திருமதுரைச் சீர்ப்பாட் டிளையாற்றங்
குடிச்செட்டி சீமான் என்றும்

உருமதனன் அழகப்பன் உதவியமுத்
தையன்எனும் ஒப்பில் சிங்கம்

அருமறைசாத் திரங்களோ(டு) ஆகமங்கள்
புராணங்கள் அனைத்தும் தேர்ந்து

பெருகுபழ மொழிநூறுங் கதைநூறும்
வழக்க[1]மெனப் பேசிற் ருமால்.

1. பாடம்: சதக.

உ

சிவசிவ

செந்திலாண்டவன் துணை

# செயங்கொண்டார் வழக்கம்*

## பாயிரம்

### கணபதி துதி

*அறுசீர் ஆசிரிய விருத்தம்*

சீர்பொருந்துந் தென்நேமச்[1] செயங்கொண்ட
சோழீசர் திருப்பேர் வாழ்த்திப்

பார்பொருந்துங் குறு[2]விருத்தப் பாமாலை
தனிலுலகப் பழமைச் சொல்லை

ஏர்பொருந்துஞ் செந்தமிழால் யான்பாடப்
புவியிலுள்ளோர் இசைந்து கேட்கக்

கார்பொருந்துந் துதிக்கரத்தான் வெயிலுகந்த
கணபதிதாள் காப்புத் தானே. 1

---

* இது செயங்கொண்டார் சதகம் எனவும் பெயர் பெறும்.

1. சீர்-சிறப்பு. தென் - அழகிய. நேமம் - நேமநகரம்; இது காரைக்குடியையடுத்த குன்றக்குடிக்கு வடக்கே அண்மையில் ஒன்றரை மைலில் உள்ளது. செயங்கொண்ட சோழீசர் - செயங்கொண்டார்; இவர் நேமநகர்ச் சிவாலயத்தில் எழுந்தருளிய சிவபெருமான். குறுவிருத்தப்பா - அறுசீர் ஆசிரியவிருத்தம். ஏர் - அழகு. கார் - கருமை. வெயிலுகந்த கணபதி - நேமநகர் ஸ்தலவிநாயகர்.

பாடபேதம்: 1. நியமச் 2. குரு.

## முருகன் துதி

நகரமெல்லாம் பணிந்தேத்துஞ் செயங்கொண்ட
சோழீச நாய ஞர்மேல்
மகரநெடுங் கடலுலக வதந்தியைச்[1]செந்
தமிழால்யான் வழுத்து தற்கே
அகரமுதல் அவ்வெழுத்தென் ருதியில்முப்
பால்சொன்ன அவன் தாள் போற்றிச்
சிகரவரை மீதெழுந்த குன்றைவடி[2]
வேலவன்தாள் சென்னி சேர்ப்பாம். 2

## கலைவாணி துதி

சிலைவேளை வென்றபிரான் தென்நேம
நகரில்வளர் செயங்கொண் டார்மேல்
உலகிலுள்ளோர் வழக்கமதாய்ச் சொன்னசொல்லைத்
தமிழாலே உரைப்ப தற்குக்
கலைவாணி யாகியுல குள்ளமட்டும்
படிக்கவந்த கவிதை தன்னில்[3]
மலர்வேதன் மணவியென்றன் மனத்திலிருந்
திவ்வுரையை வழுத்து வாளே. 3

---

2. நாயனுர் - கடவுள். மகரம்-மீன். வழுத்துதற்கு - சொல்லுதற்கு அகர முதல் அவ்வெழுத்து - 'அகர முதல வெழுத்தெல்லாம்' என்று தொடங்கும் திருக்குறளே. ஆதியில் - கடைச் சங்க காலத்திற்கு முன். உலகவதந்தி - உலக வழக்காகிய பேச்சு. முப்பால் - அறம், பொருள் இன்பம்; திருக்குறள். முப்பால் சொன்ன அவன் - திருவள்ளுவர். சிகரவரை - சிகரங்களையுடையமலை; இங்கு மயூரகிரி; குன்றக்குடிமலை. குன்றைவடி வேலவன் - மயூரகிரி ஆறுமுகப் பெருமான்

பா - ம்: 1. வசந்தையைச்; வழக்கத்தைச். 2. சிறந்தவடி.

3. சிலைவேள் - மன்மதன். சிலைவேளை வென்றபிரான் - சிவ பெருமான். கலைவாணி - சகல கலைகளிலும் வல்லவள். மலர்வேதன் மணவி - சரசுவதி. வழுத்துவாள் - சொல்லுவாள்.

பா - ம்: 3. கவிதாகன்னி.

### அவையடக்கடம்

பத்தர்கழுத் தினில்[1]சூரி தண்டலையென்(று)
எமக்குரைத்த[2] பரமர் மீதில்
வித்தகர்முன் உலகவழக்[3] கத்தையெடுத்(து)
ஒருநூறு விருத்தஞ் செய்தான்
அத்தைநிக ரெனச்செயங்கொண் டார்மீதில்
முத்தையன்சிற் றறிவி னுலே
மத்தகயந் தனக்குமுன்னே சிற்றெறும்பு
நடந்ததென வசனித் தேனே.

பாயிரம் முற்றிற்று.

---

## நூல்

### கல்விக்கழகு கசடற மொழிதல்

நல்வேட வான்மீகர் சத்தரிஷி
களைச்சேர்ந்து[4] ராம மந்த்ரம்
சொல்வழுவி லாதுபகர்ந்த திறமையில்பின்
வருங்கதைமுன்[5] சொன்னுர் அன்ருே?
வில்விசையன் தெவ்வைவெல்லக் கணைகொடுத்த
செயங்கொண்டார் விளங்கு நாட்டில்
கல்விதனக் கழகுகச டறமொழிதல்
எனமுன்ஞேர் கழறு வாரே[6]. 1

---

4. பத்தர் - அரிவாட்டாயநாயனுர். சூரி - அரிவாள். தண்டலை - தண்டலை நீள்நெறி என்றதலம். வித்தகர் - மேலானவர்; பெரியோர். அத்தை - அதனை; யானைக்கு முன் சிற்றெறும்பு நடத்தலை. நிகர் - ஒத்த. முத்தையன் - பாடுவார். முத்தப்ப செட்டியார். கயம் - யானை

பா - ம்: 1. பத்தருளத்தினில். 2. உமைக்குரைத்த. 3. மூன் றுலகவழக்.

1. வேட வான்மீகர் - வேடனுக இருந்து முனிவரான வான்மீகர். சத்தரிஷி - அத்திரி. ஆங்கிரசன், கெளதமன், அகத்தியன், பரத்து வாசன். காசிபன், வசிஷ்டன் என்போர். கதை - இராமகாதை. விசையன் - அருச்சுனன். தெவ்வை - பகைவர்களை. கணை - பாசுபதம். கசடுஅற - குற்றம்நீங்க.

பா - ம்: 4. களைச்சேர்ந்த. 5. சொல்லநாவில்லாது கற்றறி யாமையின் மராவெனமுன். 6. மொழிவதென என்றுங் கருதுவாரே.

### பெருமரத்தைச் சுற்றிய வல்லிக்கொடியும் சாகாது

அருமறைமார்க் கண்டன்நிதம் திருக்கடவூர்
வேணியனை அன்பாய்ப் பற்றி[1]
வருசமன்றன்[2] பகையடக்கித் தீர்க்காயு
ளாய்ப்புவியில் வளரா நின்றான்;[3]
தருவைநிகர் தென்நேம நகரில்வளர்
செயங்கொண்டார் தமிழ்சேர் நாட்டில்
பெருமரத்தைச் சுற்றிநின்ற[4] வல்லியுஞ்[5]சா
காதெனவே பேசு வாரே. 2

### தருமம் தலைகாக்கும்; அதர்மம் அழிந்துவிடும்

அருமைசெறி பாண்டவர்கள் பங்காளி
செய்கொடுமை யால்கா டாண்டும்
உரிமையுடன் தருமர்செய்த நன்றியினால்
திரும்பவும்வந் துலகை ஆண்டார்;
பருவரைவில் லாவளைத்த[6] செயங்கொண்டா
ரே! எவரும் பண்பாய்ச் செய்த
தருமந்தான்[7] தலைகாக்கும் அதர்மமழிந்[8]
திடுமெனவுஞ் சாற்று வாரே. 3

---

2. மறை - மறையவன். மார்க்கண்டன் - மார்க்கண்ட முனிவர். நிதம் - நாடோறும். வேணியன் - சிவபெருமான். சமன்-யமன், பகை - பதினாறு வயதில் உயிரைக் கொண்டு போகும் பகையினை. தீர்க்காயுள் - சிரஞ்சீவிபதம். தரு - கற்பகவிருட்சம். வல்லி - கொடி.

பா - ம்: 1. போற்றி. 2. வருசமவெம். 3. வாழ்கின் றானே. 4. சுற்றுகின்ற. 5- வள்ளியுஞ்.

3. பங்காளி - துரியோதனாதி நூறுபேர்கள். காடு ஆண்டும் - பன்னிரண்டு வருடம் காட்டில் வசித்தும், ஒருவருடம் நாட்டில் மறைந்து வசித்தும். தருமர் - தருமபுத்திரர். பருவரை - மேருமலை. வில்லா - வில்லாக. பண்பு - முறை, தகுதி. தருமம் - அறச்செயல்; சிவபுண்ணியம். அதர்மம் - பாவச்செயல்.

பா - ம்: 6. பருவரையை வில்வளைத்த. 7. தருமமே. 8. அதர்மமே அழிந்.

### பிறரைத் தொழுவார்எல்லாம் உழுவார் தலைக்கடையில்

உழுதிளையான் குடிமாறன் முளைவாரி
அன்னமன்பர்க்(கு) உதவிப் பாரில்
வழுவாத கீர்த்தியுடன் ஒருநாளும்
கேடில்லா வாழ்வு பெற்ருன்;
மழுவேந்துங் கரதலத்தார் செயங்கொண்டார்
வளநாட்டில் மறைக ளோதித்
தொழுவாரெல் லாமுழுவார் தலைக்கடையில்
என்றுலகஞ் சொல்லு மாதோ[1]. 4

### வஞ்சகம் நெஞ்சைப் பிளக்கும்

தஞ்சமெனச் சரண்புகுந்த அமரர்களைப்
புரப்பதற்காச் சரவ ணத்தில்
மஞ்சனெனத் தோன்றியவேள் வடிவேலால்
கிரவுஞ்சம் மாய்ந்த தன்ரே[2]?
செஞ்சரணத் தால்யமனை வென்ற[3]செயங்
கொண்டாரே! தேவ ரேனும்
வஞ்சகம்நெஞ் சைப்பிளக்கும் இதுபொய்யல
உலகில்நிச வசனந்[4] தானே. 5

---

4. முளை - நெல்முளை. அன்பர்க்கு - சிவனடியார்க்கு இங்கே, பெரிய புராணம் இளையான்குடிமாற நாயனர் புராண வரலாறு நினைவிற் கொள்ளற்பாலது. மழு - மழுவாயுதம். மறைகள் - வேதங்கள் முதலியன. தொழுவார் - அடியார்கள்; பிறர் அடிமையுள்ளவர். உழுவார் - வேளாளர். தலைக்கடை - தலைவாசல். மாது, ஓ; அசைகள்.

பா - ம் 1. சொல்லுந் தானே; சொல்லுங் காலே.

5. தஞ்சம் - ஆதரவு. சரவணம் - சரவணப் பொய்கை. மஞ்சன் என - குழந்தையாக. வேள் – சண்முகக்கடவுள். கிரவுஞ்சம் - கிரவுஞ்சமலை. செஞ்சரணம் - திருவடி. வஞ்சகம் - சூழ்ச்சி.

பா-ம்: 2. மிஞ்சியசெவ் வேள்சிவனர் மந்திரத்தை ஒளிந்திருந்து விரும்பிக் கேட்கப், பஞ்சமுகன் சபித்தொருமீ னெனக்குகனும் கடலிலகப் பட்டுத் தீர்ந்தான். 3. வென்று. 4. இதுஉலகில் நிசவசன வார்த்தை.

## பெரியோரைத் துணைக்கொள்

அரியோனைக் கௌசிகன்பால் விடமலைத்தான்
தசரதன்விட் டதற்கி லாபம்
கரியோன்தான் அதிசௌரி யந்தனக்கும்
தனுவினுக்கும் கமலத் தாட்கும்
உரியோனு கியதுமுனி செயலன்றோ?[1]
செயங்கொண்டார் உலகந் தன்னில்
பெரியோரைத் துணைக்கொளென்ற அவ்வை[2]வாக்
கியத்திலொன்றும் பிசகி டாதே. 6

## யானை நிழல் பார்க்கையில் தவளை நீரைக் கலக்கிவிடும்

பானுகுல ராமனுக்குப் பட்டாபி
ஷேகமெனப் பகர்ந்த போது
கூனியொரு மித்திரத்தைக் கெடுத்துவன
முறையவிட்ட[3] கொள்கை போல
மானணியுங் கரத்தாரே! செயங்கொண்டா
ரே! புவியின்[4] மகிமை சேர்ந்த
ஆனைநிழல் பார்க்கையிலே தவளைவந்து
கலக்கிவிடும் அதுமெய் தானே. 7

---

6. அரியோன், கரியோன் - இராமன். கௌசிகன் - விசுவாமித்திரன். தனு - வில்; கோதண்டம். கமலத்தாள் - சீதை. முனி - விசுவாமித்திர முனிவர். செயல் - செய்கை. வாக்கியம் - ஆத்திசூடியில் உள்ள வாசகம்.

பா - ம் 1. உரியோனு கியமறைதேர் முனியன்றோ. 2. துணைக்கொள்ளென் றவ்வையார்.

7. பானுகுலம் - சூரியகுலம். கூனி-மந்தரை; இவள் கைகேசியின் உயிர்த்தோழி. மித்திரம் - நட்பு. வனமுறைய - காட்டில் பதினுங்கு வருடம் வசிக்க. விட்ட - விட்டுவிட்ட. மான் அணியும் - மானைத்தரித்த புவி-பூமி மகிமை - மேன்மை. ஆனை - யானை.

பா - ம் 3. சூத்திரத்தைக் கொடுக்கவவ னூரைவிட்ட 4. செயங்கொண்டார் புவியினிலே.

### படைக்குப் போகாதவர் நல்ல வீரர்

தொடைக்கிலங்கு மார்பனிலக் குவன்கைவலு
வென்றுமகன் சொன்ன[1] பேச்சை
அடக்கிராவ ணன்நாளை ஓரம்பால்
நான்வெல்வேன் அறியென் றுற்போல்
சடைக்கிதழி மாலையணி செயங்கொண்டா
ரே! எதிரி[2] தளத்துக் கஞ்சிப்
படைக்குப்போ காதவர்கள் மிகநல்ல
வீரரெனப்[3] பகரு வாரே. 8

### ஊர் இரண்டானால் கூத்தாடிக்கு லாபம்

பேரிலுயர் வாலிசுக்கி ரீபரிரு
வரும்பகையாய்ப் பிரிய ராமர்
காரியத்துக் காக[4]வந்து கடலடைத்துச்
சிறைமீட்ட கணக்குப் போலே
மேருவைவில் லாய்வளைத்த செயங்கொண்டா
ரே! உலகில் விளங்குஞ் சொல்லும்
ஊரிரண்டு பட்டதென்றால் கூத்தாடிக்
கேலாபம் உண்டென் பாரே[5]. 9

---

*8.* தொடை - பூமாலை. வலு - வலிமை. மகன்-இங்கு இந்திரசித்து. வெல்வேன் - (இலக்குமணனையும் இராமனையும்) வெற்றிபெறுவேன். இதழி - கொன்றை. தளம் - சேனை.

பா - ம் *1.* மார்பனிலக் குமணன்வில் வலுவென்றான் சொன்ன. *2.* செயங்கொண்டார் எதிரியது. *3.* நல்லசேவக ரெனவும்.

*9.* வாலி - கிட்கிந்தைக்கு அரசன். சுக்கிரீபன் - வாலியின் தம்பி. கடல் அடைத்து - கடலில் அணையிட்டு (இலங்கை சென்று), சிறை மீட்ட (சீதையைச்) சிறையிலிருந்துமீட்ட. கணக்கு - காரியம், மேரு - மேரு மலை.

பா - ம்: *4.* காரியத்திற் காகி. *5.* ஊரிரண் டானதினால் கூத்தாடிக் கழகெனவும் உரைத்த வாறே.

**நெல்லோடே பதரும் அசத்தினில் அதரும்**

சொல்லோடே இணங்குகடல் திருவுடன்மூத்
தாள்பிறந்த செய்தி[1] பாரில்
நல்லோடைச் சலத்தில்சில பாசிபடர்ந்
திடலுந்த னஞ்ச யன்கை[2]
வில்லோடே மோதியதோள் செயங்கொண்டா
ரே! வயலில்[3] விளைவுண் டான
நெல்லோடே பதருமசந் தனிலதரும்
பிறந்திருக்கும் நேர்மை தானே. 10

**சுங்கம் மாறியபோது சுண்ணும்பும் கொடுக்கார்**

நங்கைகலை[4] வாணிகம்ப ரிடத்திருக்கத்
தண்டிகையில் நலமாய் வாழ்ந்தார்;
அங்கவள்தான் புறம்போகக் கம்பரன்றே
கூலிக்கோ ராளா னுரே[5];
செங்கையுகி ரால்வேதன் சிரத்திலொன்றைத்
துணித்துவிட்ட செயங்கொண் டாரே!
சுங்கம்மா றியபோது சுண்ணும்பும்
கொடுக்கார்தொல் புவியு ளோரே. 11

---

*10.* சொல் - புகழ். கடல் - பாற்கடலின்கண். திரு - இலக்குமி. மூத்தாள் - மூதேவி. பாசி - நீர்பாசி. தனஞ்சயன் - அருச்சுனன். வில்லோடே மோதி - வில்லால் அடிபட்ட. பதர் - உள்ளீடு இல்லாத நெல். அசம் - ஆடு. அதர் - ஆட்டின் கழுத்தில் தொங்கும் தசைக் கட்டு.

பா - ம்: 1. செயலும் 2. நல்லோடைச் சலத்திலுசி லம்பாசி பிறந் திருக்கும் நடத்தை பார்த்தேன். 3. செயங்கொண்டார் வயல்தனிலே.

*11.* கலைவாணி - சரசுவதி. தண்டிகை - சிவிகை. நலமதாய் - சிறப்புடன், கம்பர் அன்றே கூலிக்கோராளானுர் என்றது கம்பர் வறுமையினுல் சோழநாட்டைவிட்டுத் தெற்கே நாட்டரசன் கோட்டை என்ற ஊரை அடைந்து ''நெல் கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே'' என்று வேலி என்னும் செட்டிச்சிக்குக் கூலிக்கு மண்சுவர் வைத்தார் என்ற வரலாற்றைக் குறிப்பது. உகிர் - நகம். வேதன் - பிரமன். சுங்கம் - வரி.

பா - ம்: 4. நங்கமல. 5. அங்கவள்தான்பிரிந்த பின்பு கம்பர்தகக் காலிதனக் காளா னுரே.

## பாப்பானுக்கு வாய்ப்போக்காதே

தாப்பாய்வா மனன்கையிலே மாவலிதண்
ணீர்விட்டுத் தரணி தோற்றுன்;[1]
வாய்ப்பாய கோசிகன்றன் வஞ்சனையால்
அரிச்சந்த்ரன் மனைவி[2] விற்றுன்;
தீப்போலே விழிகாட்டி மதனுடலை
எரித்துவிட்ட செயங்கொண் டாரே!
பார்ப்பார்க்கு வாய்ப்போக்கொண் ணுதாண்டிக்[3]
கதுதானும் பகரொ ணுதே. 12

## திருவெண்ணீறே தீவினை அகற்றும்

பண்ணுருங் கவுணியர்வி பூதியினுல்
வழுதிசுரம் பாதி தீர்த்தார்;
எண்ணுயி ரஞ்சமணர் திருநீற்றை
மறந்துகழு ஏறி மாய்ந்தார்;
பெண்ணுளைச் சடையில்வைத்த செயங்கொண்டா
ரே! உலகில் பெருமை சேர்ந்த
வெண்ணீறே வினையகற்றும் தரிப்பவர்க்குச்
சிவகதியும் மேவுந் தானே[4]. 13

---

12. தப்பாய் - தவறி. வாமனன் - திருமால் தசாவதாரத்தில் ஒன்ருன குறள்வடிவினன். மாவலி - ஓர் சக்கிரவர்த்தி; அரக்கனுமாம். தரணி - பூமி; அதாவது அரசு கோசிகன் - விசுவாமித்திரன் - மனைவி- இங்குச் சந்திரமதி. மதன் - மன்மதன். ஆண்டி - பிச்சைக்காரன்.

பா - ம்: 1. ஈந்தான். 2. வாய்ப்பாய்க்கோ சிகர்க்குமுன்னுல் அரிச்சந்திரன் ஆசைசொல்லி மனைவி. 3- போக்காதே ஆண்டிக்.

13. பண் - இசைப்பாடல் கவுணியர் - கௌணியர் கோத்திரத்தில் அவதரித்த திருஞான சம்பந்தர், வழுதி - கூன்பாண்டியன். சுரம் - வெப்பு நோய், சமணர் - அருகனை வழிபடும் சைன மதத்தினர் கழு - கழுமரம். பெண்ணுள் - கங்கை. வெண்ணீறு - வெள்ளிய விபூதி வினை - தீவினை கதி - மோட்சம்.

பா - ம்: 4. வினையகற்றும் உண்மையுடன் தரிப்பவர்க்கே மெய்ய தாமே

**முள்ளால் எடுப்பதனைக் கோடரியால் பிளத்தல் நன்றன்று**

புள்ளாலே பொறியரவத் துசன்மடிந்தால்
தருமருக்குப் பொரும்போர் உண்டோ?
துள்ளாடத் திருப்பிவிட்டுப் பின்பவனைச்
செயிக்கமிகத்[1] தொல்லை யாச்சே;
வெள்ளானைக் கிறைபணியுஞ் செயங்கொண்டா
ரே! பகையை மெலிவி யாமல்
முள்ளாலே எடுப்பதனைக் கோடரியால்
பிளத்தலது முறைமை யாமே[2]. 14

கொண்டவன் தூற்றினல் கூரையும் தூற்றும்

பண்டகலி கையை[3] இந்தி ரன்களவாய்த்
தழுவிவெளிப் படுஞ்சா லத்தைக்
கண்டுமுனி சகியாமல் இருவரையும்
சபித்ததனுல் கனவீ னந்தான்;[4]
இண்டைபுனை சடையாரே! செயங்கொண்டா
ரே! புவியில் இல்லாள் பேச்சைக்
கொண்டவன்தூற் றும்போதே கூரையொக்கத்
தூற்றுமெனக் கூறு வாரே. 15

---

*14.* புள்ளாலே - சக்கரவாளப்பட்சியினுலே. பொறி - புள்ளி. அரவத்துவசன் - துரியோதனன். கானகத்தில் சக்கரவாளப்பட்சி துரியோதனனைக் கொல்ல ஆகாய மார்க்கமாகத் தூக்கிக்கொண்டு போகும்போது அவன் அபயமென்று கதற அதனைக்கேட்ட தருமன் அருச்சுனனைக் கொண்டு விடுவிக்கும்படி செய்தார் என்பது ஒரு வரலாறு துள்ளாட - துள்ளி மகிழ. தொல்லை - தொந்தரவு, வெள்ளானைக்கு இறை - இந்திரன். கோடரி - மரம் வெட்டும் கருவி.

பா - ம்: 1. செயிக்கமெத்த 2, கோடரியால் எடுக்கவந்த முறைய தாமே

*15.* பண்டு - முற்காலம். அகலிகை - கௌதமர் மனைவி. களவு - பிறர் அறியா வொழுக்கம் சாலம் - மார்ச்சாலம்; பூனை. சாலம் - இறுமாப்பு மாம் இருவர் - இந்திரன், அகலிகை. சபித்தல் - இந்திரன் உடலெல்லாம் ஆயிரம் யோனியாகவும், அகலிகை கல்லாகவும் சாபமிடுதல். கனவீனம் - மிக இழிவு. இண்டை - இண்டைமாலை. இல்லாள் - மனைவி. தூற்றுதல் - பழிச்சொற்கூறல்.

பா - ம்: 3 பண்டுலகில் அகலியை. 4. கனச்சொல் லாச்சே.

**உடை குலைந்த பிறகு முறைமை கொண்டாடுவதால் பயனில்லை.**

கடலீன்ற[1] சந்திரனைக் குருமனைவி
 கலந்தணையக் கருதி வாவென்
றிடவுமதி தொடலாமோ ? பின்வருவ
 தறியாமல் இணங்கி ஞனே ;
சடையிலங்கக் கங்கையணி செயங்கொண்டா
 ரே! மாரன்[2] சரந்தாங் காமல்
உடைகுலைந்த பின்புசொந்த முறைமைகள்கொண்[3]
 டாடுவரோ ? உலகு ளோரே. 16

**புத்திமான் பலவான் ஆவான்**

சுத்துமதிற் கலிங்கசிந்து சூழுசிக்
 காந்தமெனுந் துருக்கந்[4] தன்னை
எத்தும்விலை மாதர்களால் பண்டுகரு
 ணுகரன்வென் றிட்டான்[5] அன்றோ ?
கைத்திகிரி யோன்பணியும் செயங்கொண்டா
 ரே ! மிகுந்த கருத்துண் டான
புத்திமானே பலவாஞ மென்றுலகோர்
 சொல்லுவதும்[6] பொருந்துந் தானே. 17

---

*16.* கடல் - பாற்கடல் குரு - தேவகுரு; வியாழபகவான். அணைய - அனுபவிக்க. மதி - சந்திரன். பின்வருவது - பின்வரும் துன்பம்; அது இறக்கும்படி சபித்ததாகும். பின்னர் தேவர்கள் வேண்டுகோளின்படி சந்திரன் உயிருடன் உலாவினன் என்பதாம். மாரன் - மன்மதன். சரம் - புட்பபாணம் உடை - ஆடை.

பா – 1. கடனின்ற 2. மதன 3. முறைமைகொண்.

*17.* சுத்து – சுற்று கலிங்கம் - கலிங்க நாடு. சிந்து - கடல். ஊசிக்காந்தமெனும் துருக்கம் - ஊசிக்காந்தத்தாலாகிய கோட்டை எத்தும் - கபடமாக நடக்கும்.- விலைமாதர் - வேசியர். கருணாகரன் - சோழனது தலைமைச் சேனாதிபதி. கருணாகரன் தாசிகளைக் கொண்டு கோட்டைக்குள் இருந்த ஆயிரம் வீரர்களையும் கைப்பற்றிக் கலிங்கக் கோட்டையை வென்றான் என்பது ஒரு வரலாறு. கைத்திரியோன் - திருமால்.

பா - ம் 4 சுத்துமளக் கலிங்கமெனும் கடல்சூழ சிக்காந்தத் துருவங். 5. வென்றெடுத்தான். 6- பலவாஞவானெவுஞ் சொல்லிய சொல்.

### நடுநிலைமையுடன் நீதி புகல்வோர் அறிவுடையோர்

ஆளைப்போல் வருமிருகந் தனக்கும்வீ
மனுக்கும்வழக் கான நியாய
வேளைக்கா[1] தரவுதரு மர்வீமன்
உடல்பாதி மிருகக் கென்றார்[2]
வேழப்போர் வையைத்தரித்த செயங்கொண்டா
ரே! சீனி வெல்லம் போட்டு
நாழிப்பால் வார்த்தாலும் நடுச்சொல்வார்
அறிவுடைய நடுவுள் ளோரே[3]. 18

### ஒருவன் செய்த பழி தன்னையே சார்ந்து வருத்தும்

விழியெதிர்நில் லாதொளித்து வாலியைமால்
எய்துகொன்று விடவே வாலி
வழியுடனே மறுசனனம் எடுத்தரியை
எய்துபழி வாங்கி னானே;
அழலுமழு வணிகரத்தார் செயங்கொண்டார்
நன்னாட்டில் அமரர்க் கேனும்[4]
பழிகிழம தாகிவிட்டுப் போவதில்லை
என்றுலகோர்[5] பகரு வாரே[6]. 19

---

*18.* ஆளைப்போல் வருமிருகம் - மானுட முகந்தாங்கிய புருஷாமிருகம். வீமன் - வீமசேனன்; தருமன் தம்பி. வழக்கு - வீமன் ஓட்டத்தைப் புருஷாமிருகம் பிடித்தால் வீமனைக் கொல்லுதல்; பிடிக்கமுடியாவிடில் புருஷாமிருகம் வீமன் பலவான் என்று புகழ்தல். நியாயவேளை - நடுநிலைமை கூறும்பொழுது, வீமன் ஓடும்பொழுது தன் எல்லையில் ஒரு காலும் புருஷாமிருகத்தின் எல்லைப்புறத்தில் ஒருகாலும் வைத்தபோது புருஷாமிருகம் வீமனைப் பிடித்துக்கொண்டது. அப்போது தருமர் நடுநிலைமையுடன் வீமன் உடலில் பாதி மிருகத்துக்கு வெட்டிக்கொடு என்றார் என்பது வரலாறு. மிருகக்கு - மிருகத்துக்கு. வேழப்போர்வை - யானைத்தோல். நாழி - ஓர் அளவு. நடு - நியாயம்.

பா - ம்: *1.* நியாயம் ஏழைக்கா. *2.* உடல்பாதி இதற்கென்றாரே. *3.* அறிவுமிகு நல்லோர் தாமே (நியாயத் தாரே.)

*19.* விழியெதிர் - நேர்முகமாக; மால் - இராமன். எய்து - அம்பால் அடித்து. வழியுடனே - வேடர் வழியிலே. அரியை - இங்குக் கிருஷ்ணனை. பழிவாங்கினான் - வாலியாகிய வேடன் முன்னே தன்னைக்கொன்ற திருமாலாகிய கண்ணனை இப்போது பதிலுக்குப்பதில் கொன்றான். அழலும் - சொலிக்கும். அமரர் - தேவர்கள்.

பா - ம்: *4.* அமர ரென்று. *5.* பழிகிழவனாகிவிட்டுப் போவதில்லை என்று உலகம். *6-* பகருந் தானே.

### சரசம் மிஞ்சினாலும் கை போடலாகாது

அரசன்மக ளாரையம்பி காபதிசேர்ந்
தததனைமன்னன்[1] அறிந்து நாட்சென்(று)
உருசிபிறந் தொருநாள்[2] அத் தாட்சியுடன்
அவனுயிரை ஒழித்தான்[3] அன்றோ?
பரசணியுங் கரத்தாரே! செயங்கொண்டா
ரே! மிகுந்த பழக்க மேனும்[4]
சரசமிஞ்சி மேலேகை[5] போடவொண்ணா
தென்றுலகோர் சாற்று வாரே[6]. 20

### பங்காளிக்குப் பல்லிலே விடம்

கும்பகர்ண னுக்கிளையோன் தமயனுயிர்
நிலைநாட்டிக் கொல்லென் றே[7]நி
கும்பலைக்குந் துறவுசொல்லி இலங்கைமன்னன்
வலுவைமுற்றுங் குறைத்தான் அன்றோ?
செம்பிநன்னாட் டவர்[8]புகழும் தென்நேம
நாட்டில்வளர் செயங்கொண் டாரே!
தம்பிபிறக் கத்தரையா மென்றிடுஞ்சொல்
அரக்கனுக்கே[9] தகுங்கண் டீரே. 21

---

*20.* அரசன் - குலோத்துங்கசோழன். அம்பிகாபதி - கம்பர்மகன் உருசி பிறந்து ஒருநாள் - (அரசன் அம்பிகாதியுடன்) உருசியுடன் கூடிய விருந்து உண்ட ஒருநாள். அத்தாட்சி - அடையாளக்குறி. பரசு - மழு. சரசம் - இன்பப்பேச்சு.

பா-ம் 1. சேர்ந்ததை மன்னன். 2. அரசுபிறகொருநாள். 3. அழித்தான். 4. பழக்க மானால். 5. ரவிக்கையிற்கை. 6. தென்றுலகம் சாற்றுந் தானே.

*21.* கும்பகர்ணனுக்கு இளையோன் - விபீடணன். தமயன் - இங்கு இராவணன். நிகும்பலை - நிகும்பலையாகம்; இது இந்திரசித்து இராமன் படையினை வெல்லச்செய்ததாகும். துறவு - விடுதலை. செம்பிநன்னாடு - சோழநாடு. சிவகங்கையைச் சார்ந்த ஒருபகுதியுமாம். தரை - வெறுநிலம்- அரக்கன் - இராவணன்.

பா-ம்: 7. கொள்ளென்றே. 8. செம்பியநாட் டவர். செம்பினாட்டவர். 9 தம்பிறக்கப் பிறகுசொல்லிய சொல் அரக்கனுக்குத்.

### வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

கல்லான மாரியைஇந் திரனனுப்ப
ஆய்ப்பாடிக் கண்ணர்க் கம்பு
வில்லேதும் இன்றியொரு கற்குடையால்
வந்தமழை விலக்கி ஞரே;
செல்லாருங் குழலிசவுந் தரியையிடப்
பாகம்வைத்த செயங்கொண் டாரே!
வல்லார்க்குப் புல்லுமொரு ஆயுதமாம்
என்றுலகோர் வழங்கு வாரே[1]. 22

### பிறர் மனதறியாமல் மயங்கி அலேதல் கூடாது

உறுக்குதலும் நயத்தலுமார் சூர்ப்பநகை
இலக்குமணன் உயர்தோள் சேரச்[2]
சுறுக்கிற்சென் றெடுக்கஅவன் இணங்காமல்
மூக்குமுலே துணித்தான் அன்ருே?
மறிக்கிசைந்த கரத்தாரே! செயங்கொண்டா
ரே! மிகுந்த[3] மயலுண் டாகிச்
சிறுக்கிமன தறியாமல் செடிதனேக்கை
யால்தூக்கித் திரிந்த வாறே. 23

---

*கல்லானமாரி* - கன்மழை. **அனுப்ப** - தனக்கு ஆயர்கள் பொங்கலிட்டு வழிபடாத கோபத்தினல் அனுப்பிவைக்க. **கண்ணர்க்கு** - கிருஷ்ணனுக்கு (*புல்லாங்குழல் அன்றி.*) ஒரு- ஒப்பற்ற கற்குடையால்- கோவர்த்தனகிரியாகிய குடையால். செல்ஆரும் - மேகம் போன்ற, குழலி - கூந்தலேயுடையவளாகிய, சவுந்தரி - செயங்கொண்டார் தேவி; உமை:

பா-ம்: 1. ஆயுதமாய் எடுத்துமன வலுச்செய் வாரே.

23. உறுக்குதல் - கோபித்தல். நயத்தல் - அன்பு காட்டுதல். சூர்ப்பநகை - இராவணன் தங்கை. சுறுக்கில் - விரைவில். மறி - மான். மயல் - காம மயக்கம். சிறுக்கி - வாலிபப்பெண்.

பா - ம் 2. மேவ. 3. ரே மகிழ்ந்த.

### மனவுறுதி உள்ளவர்கள் எங்கும் வாழலாம்

தேன்மொழிச்சீ தையைஅரக்கன் சிறையெடுத்து
வனத்தில்வைத்த[1] செயலா லுந்தான்
ஆனமட்டும் பார்க்கஅவள் கற்பழியா
தக்கினியில் அமிழ்ந்து மீண்டாள்;
மான்விழியாள் சௌந்தரிபா கா! செயங்கொண்
டாரே! நின்[2] வளஞ்சேர் நாட்டிற்
ருன்பதிவி ரதையாலுல் தேவடியாள்
வீட்டினித்தம்[3] தரிக்க லாமே. 24

### கண்டது கற்கப் பண்டிதனுவான்

பண்டுகிணற் றினிலெறிந்த பௌத்திரத்தைத்
துரோணர்சிலை பாணம் போட்டுக்[4]
கொண்டுவரக் கண்டதனஞ் சயனுமந்த
விற்றெழில்கைக் கொண்டான் அன்றே?
வண்டுவிழி யுமைபாகா! செயங்கொண்டா
ரே! உமது[5] வளஞ்சேர் நாட்டில்
கண்டதைக்[6]கற் கின்றவனே பண்டிதனு
வானென்றே[7] கருது வாரே. 25

---

24. தேன்மொழி - தேன்போன்ற சொல். வனம் - அசோகவனம் தான் ஆனமட்டும் - இராவணன் தன்னுல் முடிந்த வரையிலும் (கற்பழிப்பதற்கு). பதிவிரதை - கற்புடைய பெண். நித்தம் - எப்பொழுதும்

பா-ம்: 1. வனத்தில் வைத்துச் 2. சௌந்தரியைப் பாகங் கொள் செயங்கொண்டார். 3. தெருவினிலும்; தெருவிலேயும்,

25. கிணறு - அத்திஞபுரிச் சிங்காரத்தோப்பிலுள்ள பாதாள வாகினி என்ற கிணறு. எறிந்த - (துரியோதனன் கையில் தரித்திருந்த மோதிரத்தை அருச்சுனன் கழற்றி) எறிந்த(அப்). பௌத்திரம் - ஒரு வகை மோதிரம். சிலைபாணம் - வில்லில் தொடுத்த அம்பை. பண்டிதன் - அறிவாளி.

பா-ம்: 4. துரோணர் சிலபாணம் விட்டே. 5. வண்டுலவுங் குழலி சவுந்தரிபாகர் செயங்கொண்டார். 6. கண்டது. 7. வானெனவுங்.

### புண்ணியத்திற்கு உழுததைப் பல்பிடித்துப் பார்த்தல் கூடாது

திண்மைகழை[1] வனமெரிய மேற்கிடந்த
சூர்ப்பாம்பு தீங்கு ருமல்[2]
மண்ணில்விட நளன்கரத்தில் அரவுகடித்
தவனுடலை வடுச்செய் தாற்போல்
வெண்ணிலவைச் சடையில்வைத்த செயங்கொண்டா
ரே! குடியின் மெலிவு தீரப்
புண்ணியத்துக் குழுமெருதைப் பல்பிடித்துப்
பார்ப்பரெனப்[3] புகலு வாரே. 26

### அயல்வீட்டு ஆண்மகன் அவத்தைக்கு உதவான்

நயவேந்தன் பாரியொரு துன்மார்க்கன்
ஆசைகொண்டு நடந்தே ஆற்றில்
இயல்புடனே[4] போய்ச்சலத்தில் நின்றதைச்சிந்
தாமணியில் இயம்பி னுரே;
கயல்விழிமண் டோதரிக்கு அருள்செய்செயங்
கொண்டாரே! கணவ னன்றி[5]
அயல்வீட்டாண் மகனவனும் அவத்தைக்குத
வானென்பார் அவனி யோரே.[6] 27

---

*26.* திண்மை - (புறத்தில்) வைரம் பொருந்திய. கழைவனம் - மூங்கிற்காடு. சூர் - அச்சம். நளன் - நளமகாராசன். அரவு - கார்க்கோடகன் என்னும் பாம்பு. வடு - குற்றம். இங்கு உடல் கருநிறமும் குறன் வடிவும் ஆன குற்றம். குடி - குடும்பம். மெலிவு - வறுமை.

பா - ம்: 1. நுண்ணு கழை' நண்ணு மழை. 2. மேற்கிடந்த பாம்புசெத்திடாமல் தாங்கி. 3 பார்ப்பதெனப்.

*27.* நயவேந்தன்-ஒரு நல்ல அரசனின். பாரி - மனைவி. துன்மார்க்கன் - அரண்மனையில் ஊழியம் செய்யும் தீயவழியில் ஒழுகும் ஒருவலையன். துன்மார்க்கன் அரசன் மனைவியைப்பிறர் அறியாமல் அழைத்துப் போய் இடுப்பளவு ஆற்று நீரில் இரங்கச்செய்து அக்கரைக்கு அழைத்துப் போவதுபோல் பாவனை காட்டி உடுத்த ஆடை ஆபரணங்கள் யாவற்றையும் வாங்கிக்கொண்டு அங்கேயே அவளை விட்டுவிட்டு ஓடிவிட்டான் என்பது ஒரு வரலாறு. சிந்தாமணி - விவேக சிந்தாமணி என்ற நூல். மண்டோதரி - இராவணன் மனைவி. இறைவன் இவருக்கு அருள் செய்ததை, " ஆர்கலி சூழ்தென் னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப் பேரருள் இன்பமளித்த பெருந்துறை மேயபிரானை " எனவரும் திருவாசக அடியால் அறியலாம்: இதன் வரலாற்றை உத்தரகோச மங்கை புராணத்தில் விரிவாய்க் காணலாம்.

பா - ம்: 4. இயைவுடனே. 5. கயல்விழியார் உமைபாகா செயங்கொண்டாரே தனது கணவன் போலே. 6. அயல்வீட்டான் மகனவனும் ஆபத்துக்கு தவானென் றறைகு வாரே.

## எண்ணெய் போக முழுகலாம்; எழுத்துப் போக முழுகமுடியாது

பெண்ணைவாழ்க் கைப்படுத்தச் சேதுமன்னன்
குறித்தவிடம் பிசகி மேலாம்[1]
கண்ணன்பரி சோதனையும்[2] தப்பிவிதிப்
படிமுடவன் கைக்கொண் டானே;
பண்ணுலவும் புகழ்[3]செயங்கொண் டாரே! மூ
வருங்கூடிப் பாரித்[4] தாலும்
எண்ணெய்தனைத் துடைத்திடலாம் எழுத்ததனைத்
துடைப்பவர்கள் இல்லை தானே.[5] 28

---

28. குறித்தவிடம் - வாழ்க்கைப் படுத்தக்குறிப்பிட்ட இடம். அரசன் தன் தமக்கை மகனுக்கு எனவும், அரசி தன் தமையன் மகனுக்கு எனவும் குறிப்பிட்ட இடம். இதனால் காலதாமதம் ஆயிற்று. கண்ணன்- திருமால். திருமால் பிரமனை நோக்கிச் சேதுராசன் மகள் யாருக்கு வாழ்க்கைப்படுவள் என்று கேட்கப், பிரமன் இவ்வூரிலுள்ள செக்கடி முடவனுக்கு உரியவள் என்றான். திருமால் முடவனுக்கா அழகிய கன்னியைக் கொடுப்பது என்று எண்ணி அதற்கு இசையாமல் கருடனைக்கொண்டு முடவனைத் தொலைவிலுள்ள ஒரு தீவில் கொண்டுபோய் வைக்கச்செய்தார். அரசி தன் மகளை ஒரு பெட்டியில் ஆடை ஆபரணங்களோடும் பலவிதமான பலகாரங்களோடும் இருக்கச்செய்து அரசனுக்குப் பலகாரப் பெட்டி என்று கூறித் தமையன் ஊருக்கு ஆள் மூலம் அனுப்பினாள். கருடன் அப்பலகாரப் பெட்டியைப் பற்றிச் சென்று முடவனிடம் வைத்துச் சென்றது. முடவன் அப்பெட்டியைத் திறக்க இராச கன்னிகை எழுந்தாள். இருவரும் மணந்தனர் என்பது கதை. மூவர் - பிரமன் திருமால், உருத்திரன் என்ற மூவர். பாரித்தல் - முயற்சித்துப் பயன்படச் செய்தல். எழுத்து - தலையெழுத்து; விதி.

பா - ம்: 1. மாதா. 2. சோதனைக்குத். 3. பண்ணுலவு புகழ்மேவுஞ். 4 மூவர்பாரித் 5. இல்லைத்தானே.

### தெய்வம் உண்டென்பார்க்கு உண்டு

பண்டுகுட்ட ரோகியுந்தான் பாரதங்கேட்
டான்நோயும் பஞ்சாய் ஓடி
விண்டுவரு கையில்கதையைப்[1] பொய்யென்றான்;
மறைந்தகுட்டம் மீறிற் றன்றோ?[2]
தண்டமிழுக் கருள்புரியும் செயங்கொண்டா
ரே! பூதந் தழும்பா தீசன்[3]
உண்டென்ற பேருக்குண்[4] டில்லையென்ற
பேர்க்கில்லை உண்மை தானே.[5] 29

### தன்னுயிர்போல் மன்னுயிரை எண்ணுதல்

முன்னொருசோ ழன்புதல்வன் தேர்க்காலில்
ஆன்கன்று[6] முறியக் கண்டே
பின்னதற்கீ டாய்த்தனது பிள்ளையைத்தேர்க்
காலிலிட்டுப் பெருமை பெற்றான்[7]
தென்நேம நகரில்வாழ்[8] சௌந்தரநா
யகிமகிழ்ந்த[9] செயங்கொண் டாரே!
தன்னுயிர்போல் மன்னுயிரை எண்ணுவர்தே
வர்முனிவர் தமக்கொப் பாரே.[10] 30

---

29. பண்டு - முன்னே. குட்டரோகி - ஒரு முனிவர் சாபத்தால் குஷ்டரோகம் கொண்ட சனமேசெய மகாராசன். நோய் - குட்ட நோய். விண்டுவருகையில் - உடல் நன்கு வளர்ந்து வருகையில், கதை - பாரதக் கதை. மீறிற்று - திரும்பவும் வந்துவிட்டது. பூதம் - பஞ்ச பூதங்கள். தழும்பாது - அவற்றைக் குற்றங் கூறாமல்.

பா - ம்: 1. விண்டுவரும் கதை தன்னைப். 2. மீண்ட தன்றோ; மேலாச் சன்றோ 3. பூதங்கள் நம்பாதீசன். 4. உண்டென்பார்க்குண் 5. இல்லையென உரைக்கலாமே.

30. சோழன் - மனுநீதிச்சோழன். புதல்வன் - இவன் வீதிவிடங்கன் என்பவன். தேர்க்கால் - தேர்ச்சக்கரம். ஆன்கன்று - பசுவின் கன்று. முறிய - இறக்க. பெருமை - புகழ்; கீர்த்தி. மன்உயிர் - பிறவுயிர். எண்ணுவர் - நினைத்துச் செயல் நடத்துவர்.

பா - ம்: 6. ஆன்குழவி 7. சேர்ந்தான். 8. நகரில் வளர். 9. யகிமருவும். 10. தமக்கீ டாமே.

### வெண்ணெய் திரளும்போது தாழி உடைதல்

கண்ணர்படை தனைச்செயிக்க இந்த்ரசித்தன்
நிகும்பலையைக்[1] கருதிச் செய்தே
நண்ணியயா கமுமுடியுந் தருணத்தில்[2]
இலக்குவன்போய்[3] நாசஞ் செய்தான்;
மண்ணையுண்டோன் விழிபதத்தார் செயங்கொண்டா
ரே! கோல மத்தூ டாடி
வெண்ணெய்படும் வேளையிலே தாழியுடைந்
திடுதல்முன்செய் வினை[4]யென் பாரே. 31

### துர்ப்புத்தி அமைச்சனால் அரசுக்குக் கேடு

அற்புதரா மன்கைவலி முதனட்சண்
டையிலரக்கன் அறிந்தும் புத்தி
சொற்பமகோ தரன்பேச்சைக் கேட்டலவோ
குலத்தோடுந் துஞ்சி னானே;
தற்பரச தாசிவனே! செயங்கொண்டா
ரே! நல்யோ சனையில் லாத[5]
துற்புத்தி மந்திரியால் அரசுக்கே
ஈனமென்ற[6] சொல்மெய் தானே.[7] 32

---

31. கண்ணர் படைதனை - இராம லட்சுமணர்களின் வானரச் சேனையினை. நிகும்பலை - நிகும்பலை யாகம். மண்ணையுண்டோன் - திருமால். விழி - கண். ஆயிரம் தாமரையால் அர்ச்சிக்கும்போது ஒன்று குறைய அப்போது திருமால் தன் கண்ணைப் பிடுங்கித் தாமரை மலராக அர்ச்சித்தார் என்பது வரலாறு. பதத்தார் - சிவன். கோலம் - அழகு. தாழி - சட்டி.

பா-ம்: 1. நிகும்பலையில், 2. தருணமதில், 3. இலக்குமணன் 4. தாழிரெண்டாயது முன் செய்த விதி; தாழியுடைவதற்கவன் செய் விதி.

32. அற்புதம் - (குணத்தாலும் செயலாலும் பிறரை மகிழச் செய்யும்) அதிசயம். அரக்கன் - இராவணன். புத்தி சொற்பம் - அறிவற்ற, மகோதரன் - இராவணன் மந்திரி. துஞ்சினான் - இறந்தான். தற்பரன் - மேலானவன். நல்யோசனை - முக்காலங்களை யறிதல். துற்புத்தி - பொல்லாத அறிவு. ஈனம் - இழிவு.

பா-ம்: 5. சனைபண்ணுத. 6. அரசுக்கீனங்களென்ற. 7. தாமே.

### கோபமே பாவம் கொலைகட்குக் காரணம்

ஆவலுடன்[1] பரிதேடிக் கபிலரிஷி
இடத்திற்போய் அகம்பா ராட்டித்
தாவியவெஞ் சினத்தாலே அறுபதினு
யிரம்பேர்கள் சகராள் மாண்டார்;[2]
காவடருந் தென்நேமச் செயங்கொண்டா
ரே! பொறுமை கருதிச் செய்யாக்
கோவந்தான்[3] பெரும்பாவம் அதுசண்டா
ளம்எனவும் கூறு வாரே. 33

### காத்திருந்தோன் பெண்டுதனை நேற்றுவந்தோன் கொண்டு போதல்

ஆற்றையணி தே[4]நோக்கி ஒருநிருதன்
தவசுசெய்ய அவனுக் கோர்வாள்[5]
கூற்றையுதைத் தோன்அனுப்பக் குறுக்கிற்சென்(று)[6]
இலக்குவன்கைக்[7] கொண்டான் அன்றோ?
நாற்றிசையும் பணியவருஞ் செயங்கொண்டா
ரே! அனேக[8] நாளாய் ஒட்டிக்
காத்திருந்தோன் பெண்டுதனை நேற்றுவந்தோன்
கைக்கொண்ட கணக்குத் தானே. 34

---

33. பரி - (அசுவமேதக்) குதிரை. கபில ரிஷி - இவர் பாதாள உலகத்தில் தவஞ் செய்த சிறந்த முனிவர். அகம் - கருவம். அறுபதினுயிரம் பேர்கள் சகராள் - இவர்கள் அயோத்தி நகரை அரசாண்ட சகரன் என்னும் அரசனின் புதல்வர்கள். மாண்டார் - (முனிவர் கோபத்தோடு சகரானை விழித்துப் பார்த்தபோது அவர்கள் எரிந்து) சாம்பலானுர்கள். காவடரும் - சோலைகள் அடர்ந்த. கோவம் - கோபம் சண்டாளம் - பாதகம்.

பா-ம்: 1 ஆவலாய்ப். 2. மாய்ந்தான். 3. கோவமே.

34. ஆற்றை அணி தே - கங்கையை அணிந்த கடவுள். சிவபெருமான். ஒரு நிருதன் - இவன் சூர்ப்பனகையின் குமாரனுகிய செம்புக்குமாரன் என்னும் அரக்கன் தவம் செய்ய - பஞ்சவடி தீரத்தை அடுத்த வனத்திலே மந்திரவாள் பெறும் பொருட்டுத் தவம் புரிய. வாள் - மந்திரவாள். கூற்றையுதைத்தோன் - சிவபெருமான். அனுப்ப - ஆகாய மார்க்கமாக மந்திரவாளை அனுப்ப. இலக்குவன் குறுக்கிற் சென்று கைக்கொண்டான் - வனத்தில் இலக்குவன் காய்கனி கொண்டு வரப் போனபோது மந்திரவாள் ஆகாய வழியில் செல்வதைக் கண்டு இடையில் விரைந்து சென்று கையில் ஏந்திப் பிடித்துக்கொண்டான். ஒட்டி - நட்புக்கொண்டு.

பா-ம்: 4. ஆத்தியணிந்தே; ஆத்தியணிவனை. 5. அவனுக்கே வாள். 6. குறுக்கே சென்று. 7. இலக்குமணன். 8. ரே! அனந்த.

### குதிரை நடவாவிடின் மாவுத்தன் பறப்பனோ

விதுரன்வில்[1] முறித்தான்கன் னனும்பாம்புக்
கணைதிரும்ப[2] விட்டான் இல்லை;
எதிரிபடை தனைத்துரியோ தனன்செயிக்கப்
படைத்தலைவர் இணங்கி னாரோ ?
மதுரையிலிந் தனம்வளையல் விற்றசெயங்
கொண்டாரே ! மருவார் போரில்[3]
குதிரைநட வாவிடின்மா வுத்தர்[4]பறந்
திடுவாரோ ? கொக்காய்த் தாமே.[5] 35

### பாத்திரம் அறிந்து பிச்சையிட வேண்டும்

சாத்திரவே தியர்வசிட்டர் தருமரது
சத்திரத்தில் சலச்சோ றுண்ட
மாத்திரமே லட்சமறை யோர்புசித்தால்
ஆடுமணி மலிந்தா டிற்றே;[6]
நேத்திரத்தால் அனங்கனுடல் தனையெரித்த[7]
செயங்கொண்டார் நிமலர் நாட்டில்
பாத்திரத்தை அறிந்துபிச்சை யிடவேண்டு
மென்றுலகோர் பகரு வாரே. 36

---

35. முறித்தான் - (துரியோதனன் தன்னைத் தூஷித்தபோது) ஓடித்தெறிந்தான். கன்னன் - கர்ணன். எதிரிபடை - பாண்டவர் சேனை. படைத்தலைவர் - துரோணர், கிருபர், அசுவத்தாமா முதலியோர். இந்தனம் - விறகு, மதுரையில் விறகு, வளையல் விற்ற வரலாறுகளைத் திருவிளையாடற் புராணத்தில் காண்க. மருவார் - பகைவர். மாவுத்தர் - குதிரை வீரர்,

பா - ம் : 1. விதுரனும் வில். 2. பாம்பை மறுத்தொருகால். 3. மருவலுற்ற. 4. மாவீரர். 5. தானே.

36. சாத்திரவேதியர் வசிட்டர் - சகல சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த அந்தணராகிய வசிஷ்ட முனிவர். சலச்சோறு - பழைய சோறு, உண்ட - (கடும்பசியினால் வருந்தியபோது சமயற்காரர் கொடுக்கப்) புசித்த ஆடுமணி - தானாக ஆடி அடிக்கும் ஆராய்ச்சி மணி. மலிந்து - மிகுந்த ஒலியுடன். அனங்கன் - மன்மதன். நிமலர் - பரிசுத்தர். சயங்கொண்டாகிய நிமலர் என்க. பாத்திரம் - நல்ல தவசிகள்.

பா - ம்: 6. மலிந்தாடச்சே; 7. பொடி படுத்தும்; பொடி படுத்திய.

### தாம் கெட எவரும் விரும்பார்

அன்பான தருமரசு வத்தாமா
எனும்யானை அமரில் வீழ[1]
வன்பான புயஅசுவத் தாமர்பட்டா
ரெனப்பிசகி[2] வழுத்த லாச்சே
முன்பாத வன்எயிற்றைப் பறித்தெறிந்த
செயங்கொண்டார் முதல்வர் நாட்டில்
தன்பானை தனைச்சாயப் பிடிப்பதுண்டோ
எவருமென்று சாற்று வாரே.[3] 37

### சிறிய பாம்பானாலும் பெரிய கொம்பால் அடி

மன்னர்துரோ ணரைஒனூன் கொடுபோயிற்(று)[4]
என்றொருசொல் வழுத்தக் கேட்டே[5]
பொன்னிரத மேறியம்பு வில்லெடுத்தை
வரும்சமர்க்குப் போனார் அன்றோ?[6]
நன்னயவே தன்சிரசைக் கரத்தினில்கொள்
செயங்கொண்டார் நலஞ்சேர் நாட்டில்[7]
சின்னப்பாம் பானாலும் பெரியகொம்பால்[8]
அடியென்றே[9] செப்பு வாரே. 38

---

*37.* **அசுவத்தாமா** எனும் யானை - (**துரியோதனன் படையி லிருந்த) அசுவத்தாமா** என்ற பெயருடைய யானை; வன்பு ஆன - வலிமை பொருந்திய; பட்டார் - இறந்தார்; பிசகி - தவறி; வழுத்த லாச்சு - (**கண்ணபிரானின்** சூழ்ச்சியால் துரோணர் முன் "**அசுவத்தாமா** ஹதா மம குஞ்சரம்" என்று) சொல்லும்படிநேர்ந்தது. முன்பு - தக்கன் யாகத்தில்; ஆதவன் - சூரியன்; எயிறு - பல்.

பா - ம்: *1.* வீழ்க்க; *2.* ரெனப்பிசகு; *3.* தன்பானை சாய்வதற்குத் தான்பிடிப்பார் யாவருளர் சாற்று வீரே.

*38.* மன்னர் - திருதராட்டிரன்; வழுத்த - (ஆள்மூலம்) சொல்ல; கேட்டு - (கௌரவர் நூறுபேரும், பாண்டவர் ஐந்து பேரும்) கேட்டு; கௌரவர்கள் ஒனூனை அடித்துக் கொன்றுவிட்டுக் குருவை அழைத்து வருவோம் என்று கைத்தடியும் குத்துக்கோலும் கொண்டு சிங்காரத் தோப்பின் நாலா பக்கமும் ஓடினார்கள் என்பது வரலாறு; ஐவர் - பாண்டவர்; சமர் - சண்டை; வேதன் - பிரமன்; சிரசு - மண்டை ஓடு; செப்புவார் - சொல்லுவார்.

பா - ம்: *4.* கொண்டுபோகுது; கொடுபோகுது; *5.* வந்த தாலே; *6.* அன்றே; *7.* சிரத்தி லொன்றுதுணிந் திட்ட செயங் கொண்டார் நாட்டில்; *8.* பெரிய கம்பால்; *9.* அடியெனவும்.

### காணியை நட்டுக் களத்தில் நில்

வேணியர ஊனப்பணியும்[1] அச்சுதவா
    ணக்குரிசில் வெள்ளா மைச்சீர்
ஆணியல்வல்[2] லமையால்மூ வேந்தரையும்
    காவலில்வைத் தவதி செய்தான்;
பாணிமழு வணி[3] செயங்கொண் டாரே!எத்
    தொழில்களுக்கும் பழுதுண் டேபார்[4]
காணியைநட் டுக்களத்தில் நிற்பதுவே
    நன்மையெனக் கருது வாரே. 39

### உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமோ ?

கயிலைத்தா னுவைப்போலே[5] மறுசிவனை
    உண்டுபண்ணக் கருதித் தக்கன்
மயலுற்றே செய்வேள்வி சீர்குலைந்து[6]
    தானுமுகம் மாறினன்[7] அன்றோ ?
அயிலைப்போல் விழிஉமைசேர் செயங்கொண்டா
    ரே! இந்த அவனி மேலே[8]
உயரத்தான் பறந்தாலும் ஊர்க்குருவி
    பருந்தாகா துண்மை தானே.[9] 40

---

39. வேணி - சடை. அச்சுத வாணக்குரிசில் - (காஞ்சிபுரத்திலிருந்த பெரிய விவசாயியான) அச்சுதவாணன் என்னும் பெயருடையவன். வெள்ளாமை - பயிர்த்தொழில். ஆண் இயல் - ஆண் தன்மையின். மூவேந்தர் - சேர சோழ பாண்டியர். அவதி - துன்பம். பாணி - கையில். பார் - பார்ப்பாயாக. காணி - வயல். களம் - நெற் களம்.

பா - ம்: 1. வேணியன்றன் அடிபணியும், 2. ஆணியவல், 3. வணிந்த, 4. தொழில்களும் பழுதண் டென்பார்.

40 தாணு - சிவபெருமான். மறு சிவனை - வேறு சிவபெருமானை. மயல் - அறிவு மயக்கம். செய்வேள்வி - செய்த யாகம். சீர்குலைந்து - (வீரபத்திரரால்) அழிவுற்று. தானும் - தக்கனும். முகம் மாறினன் - ஆட்டுத்தலை முகமாக ஆனன், அயில் - வேல். அவனி - உலகம், ஊர்க்குருவி - மிகவுயரப் பறக்கும் ஒருவகை குருவி ; அடைக்கலங்குருவி.

பா - ம்: 5. கயிலைமலைச் சிவனைப்போல, 6. செயலற்றே செய்வேள்வியுங் குலைந்து, 7. வேற்றுமுகஞ் சேர்ந்தான், 8. விழிகொள் சவுந்தரிபாகர் செயங்கொண்டார் அவனிதன்னில், 9. பருந்தாமோ உலகுள்ளோரே.

### பேருண்டி கொள்பவன் தன் கருமம் இழப்பன்

ஆணவத்தக் கன்மகத்தில் அவியுணவந்
திடுதேவர் அவர்கள் எல்லாம்
நாணமொடு மானபங்க முற்றனரே
வீரபத்ர நாத ராலே[1]
பாணிதனில் மழுவணிந்த[2] செயங்கொண்டா
ரே! ருசியும் பசியும் பார்க்கும்[3]
ஊணருந்தங் கருமமிழந் திடுவரென்ற
பழமொழிதான் உண்மை தானே.[4] 41

### உனக்கு இப்போது நன்மை வரும்; எனக்கும் பங்கு தருக என்பது தக்கதன்று

வனத்தினில்[5] இந் திரன் நளன்பால் சென்றுனக்கு
வருமான மாதைத் தான்என்[6]
தனக்குவரும் படிபேசித் தமயந்தி
தனையிணக்கித்[7] தாவென் ருற்போல்
சினக்குமர(வு) அணிந்தடியார் மனக்கவலை
தீர்த்தருளும்[8] செயங்கொண் டாரே!
உனக்குமழை பெய்யுமிப்போ தெனக்கிரவை
நீர்தாவென்[9] றுரைத்த வாறே. 42

---

*41.* ஆணவம் - ஆங்காரம்; மகம் - யாகம். அவி - அவிர்ப்பாக உணவு உண்ண. மானபங்கம் - அவமானம். தேவர்கள் தக்கன் யாகத்தில் வீரபத்திரரால் அவமானம் அடைந்த வகைகளைக் கந்த புராணத்தில் விரிவாய்க் காண்க. வீரபத்திரநாதர் - வீரபத்திரக் கடவுள். ஊணரும் - பேருணவு கொள்பவரும். தங்கருமம் - தம் தொழிலை.

பா - ம்: 1. ஏணில்லாத் தக்கனகம் அழிக்க வந்த கணபதியும் இச்சைகொண்டு, தோணியுண்டங் கிருந்தல்லோ காரியம் காட்டாமல் முகம்தும்பியானுன், 2. மானணிந்த. 3. பார்த்த, 4. ஊணனுந்தன் கருமமிழந்தானெனவும் சொல்வார் இவ்வுலகுள் ளோரே.

*42.* வனத்தில் - (தமயந்தி சுயவரத்திற்குச் செல்லும்) காட்டு வழியில். மானம் - மதிப்புடைய. மாதை - தமயந்தியை. இணக்கி - சம்மதிக்கச்செய்து. சினம் - கோபம்.

பா - ம்: 5. வனத்திறை, 6. தானே, 7. தனை எனக்குத். 8. தீர்க்கவந்த; மாற்றவந்த, 9. உனக்கு நலம் வரும்போது எனக்குதவி புரிகவென்று.

### நல்லது சொன்னால் பொல்லாப்பு இல்லை

கஞ்சனுக்குப் புவியிற்கோ யில்பூசை
இல்லையெனக் கடிந்தீர்; மீட்டும்[1]
கெஞ்சினபின் மறையவர்செய் பூசையெல்லாம்
உனக்கெனவே கிருபை செய்தீர்;[2]
பஞ்சவனுக் காய்மாறி நடித்த[3]செயங்
கொண்டாரே! பகைவ ரைத்தான்[4]
அஞ்சிநல்ல வார்த்தைசொன்னால் பொல்லாப்பு
வருவதில்லை அவனி யோர்க்கே. 43

### அனுபோகம் மிகும்போது ஔஷதம் சித்திக்கும்

முனியகலி கையைக்கல்லாய்ச் சபித்துநிவிர்த்
திக்கும்வழி முறை[5]சொன் னாற்போல்
மனுவேந்த னாகிஅரி நடந்திடுந்தாட்
பட்டப்பழைய வடிவா னாளே;
தனவானைத் தோழனென்ற செயங்கொண்டா
ரே!எவர்க்கும் தலைநாள் செய்த
அனுபோகம் மிகுந்திடும்போ[6] தவிழ்தமுஞ்சித்
திக்குமென்பர் அவனி யோரே. 44

---

43. கஞ்சன் - தாமரையில் வீற்றிருக்கும் பிரமதேவன். கடிந்தீர் கோபித்தீர். பிரமனும் திருமாலும் தான் தான் உயர்ந்தவன் என்று அகங்காரங்கொண்டு அக்கினித் தம்பமாக நின்ற இறைவனின் அடி முடியைத் தேடித் திருமால் காணமுடியாமல் வந்து அயர்ந்து இருந்த போது பிரமன் வந்து முடி கண்டேன் என்று பொய் கூறியதால் இறைவன் கோபித்தார் என்பது வரலாறு. பஞ்சவன் - பாண்டியன்; இராசசேகர பாண்டியன். மாறி நடித்த - கால் மாறி நடனஞ்செய்த

பா - ம்: 1. கடிந்தான் ஈசன். 2. செய்தான். 3. பஞ்சனுக்காய் மாறி நடித்திட்ட. 4. பகைவோர் அண்டி.

44 முனி - கௌதம முனிவர். நிவர்த்திக்கும் வழிமுறை - இராமன் விசுவாமித்திரர் வேள்வியினைக் காத்து, அப்பால் முனிவருடன் மிதிலைக்குப் போகும்போது இராமனது பாததூளி கல்லின்மேல் பட்ட மாத்திரத்தில் கல்லாய்க் கிடக்கும் நீ பெண்ணாவாய் என்று சொன்ன வகை அரி மனு வேந்தனாகி - திருமால் மனுகுலத்தில் இராமனாகத் தோன்றி. தனவான் - குபேரன். தலைநாள் - முதல் நாள். அவிழ்தம் - ஔஷதம்; மருந்து. சித்திக்கும் - பயன் தரும்.

பா - ம்: 5. சபித்துப்பின் போக்குமது மொழி. 6. தொலைந்திடும்.

### நிழலருமை வெயிலில் போனால் தெரியும்

வளமையுள்ள ராமனைவி பீஷணன்சேர்ந்
திலங்கைமணி மகுடம்[1] பெற்றான்;
தளரரக்க ருடன்இருந்தே அயர்க்குவந்தால்
அவனையொக்கச் சதிப்பார் அன்றோ;
களபமணி தனத்திசௌந் தரிபாகர்
செயங்கொண்டார் கனத்த[2] நாட்டில்
நிழலருமை வெய்யிலிற்போ னால்தெரியும்
என்பதுவும் நிசங்கண் டீரே. 45

### குப்பையிலே கிடந்தாலும் குன்றிமணி மங்காது

செப்புமரிச் சந்திரன்தான் நீசனுக்கே
விலையாகிச்[3] சென்றே நெஞ்சம்
ஒப்பிமயா னமுங்காத்த நிமித்தத்தால்
இழுக்கவனுக் கொருபோ துண்டோ?
மைப்படியும் கண்ணி[4]சவுந் தரிபாகர்
செயங்கொண்டார் வளஞ்சேர் நாட்டில்
குப்பையிலே கிடந்தாலுங் குன்றிமணி
நிறத்திலொன்றுங் குறைவு றாதே[5]. 46

---

45. சேர்ந்து - சரணாகதியடைந்து. மணி மகுடம் பெற்றான் - முடி தரித்து அரசு பெற்றான். தளர் - தோல்வியடையும். அவனை யொக்க - விபீடணனை ஒரு சமமாக, சதிப்பார் - அழிப்பார்கள், களபம் - சந்தனம். கனத்த - பெருமை பொருந்திய.

பா-ம்: 1. இலங்கை மகுடம்தான். 2. கனஞ்சேர்; தனஞ்சேர்.

46. நீசன் - சுடுகாடு காக்கும் புலையன். நெஞ்சம் ஒப்பி - மனஞ் சம்மதித்து. நிமித்தம் - காரணம். இழுக்கு - குற்றம். மைப்படியும் - மையிட்ட. நிறம் - செந்நிறத்தல்.

பா-ம்: 3 நீசனுக்கு விலையாகச், 4. குழலி, 5. குறை வராதே.

**கணக்கனுக்கும் கைக்கூலி கட்டி வாழ்தல் கடன்**

வணக்கமுடன் சித்திரபுத் திரரைஅம
ராவதிதான் வணங்கிப் பொங்கல்
இணக்கமுடன் செய்யாத நியமத்தால்
அவட்குமெத்த இடரெய் திற்றே ;[1]
அணைக்கடலின் மேல்நடந்த முகில்பணியும்
செயங்கொண்டார்[2] அருள்சேர் நாட்டில்
கணக்கனுக்குக் கைக்கூலி கட்டியன்றோ?
குடியிருக்கக்[3] கடனென் பாரே. 47

**படைக்கு ஓடி வாழ்; பஞ்சத்திற்கு இருந்து வாழ்**

கடியகனல் முனிக்கோடிப் பயந்தீசன்
ஐவிரலிக் காய்க்குள் சென்றான் ;
திடமாறன் இருந்துமஞ்சைத் தளைபூட்டிப்
புவிக்குமழை செழிக்கச் செய்தான் ;[4]
கொடியிடைப்பெண் சௌந்தரியாள் இடப்பாகர்
செயங்கொண்டார்[5] குலவு நாட்டில்
படைதனக்கோ டிப்பிழைப்பார் பஞ்சமதற்
கிருந்துபிழைப் பாரென் பாரே. 48

---

47. சித்திரபுத்திரர் - சித்திரகுத்தனூர் ; யமன் கணிதன். அமராவதி - அமராவதி என்பவள், பொங்கல் - (சித்திரா பௌர்ணமியில் இடும்) பொங்கலை. நியமத்தால் - வழிபாட்டால். மெத்த இடர் - பெருந் துன்பங்கள். இதனை அமராவதி கதையில் காண்க. முகில் - திருமால் ஆகுபெயர், கைக்கூலி - இலஞ்சம்.

பா - ம் 1 இடைஞ்சலாச்சே, 2. அணைக் கடல்மேல் நடந்த முகில் பணி செயங்கொண் டாரே ! மெய். 3. வாழ்ந்திருக்கக்.

48. கடிய கனல் முனிக்கு - பற்பமுனிக்கு (பத்மா சூரனுக்கு), பத்மாசூரன். நான் தொட்டவர் தலை வெடித்து எரிந்து போகவேண்டும் என்று வரம் இறைவனைக் கேட்டான்; இறைவனும் தந்தேன் என்றான் ; பத்மாசூரன் வரத்தைப் பரிசோதிக்க வேண்டும் என்று இறைவனை அடுத்தபோது ஓடினர் என்பது பாகவத புராண வரலாறு. ஐவிரலிக்காய் - ஐவேலிக் கொடியின் காய். மாறன் - பாண்டியன். மஞ்சை - மேகத்தை. தளை - விலங்கு. பஞ்சம் - வறுமை.

பா - ம் : 4. கடியவிடம் பாற்கடலில்தோன்றியபோ தருகிருந்த காகுத் தன்தான், நெடிய பயத்துடன் நீங்கியுங் கருநிறம் படைத்தான் நிசம தன்றோ. 5. கொடியிடை சௌந் தரி பாகர் செயங்கொண் டார் கோதில் பொன்.

### உறவுபோலிருந்து குளவியைப்போல் கொட்டுவது

திறமுளசஞ் சீவகனைத் தமரகன்கண்(டு)
அழைத்துவந்து சிங்கத் திற்கு
இறையுளமந் திரியாக வைத்தபின்சிங்
கந்தனக்கும் இடபத் துக்கும்
குறைவில்பகை[1] யுண்டுபண்ணி விட்டதன்றோ?
செயங்கொண்டார் குலவு நாட்டில்[2]
உறவுதனைப் போலிருந்துங் குளவியைப்போல்
கொட்டுவர்கள் உண்டென் பாரே[3]. 49

### எறும்பினுக்கும் தன்கையால் எண் சாண்

அறம்பெற்ற சோழன்தனை மண்ணுண்ணி
மாப்பிளையென் றதிலோர்[4] பாட்டாய்
வெறும்பித்தன் சொல்வந்த வேந்தர்சபை
யோர்கள்பொருள் விளங்கச் சொன்னார்[5]
திறம்பெற்ற பரிசுகொண்டான்; தென்நேம
நகரில்வளர்[6] செயங்கொண் டாரே!
எறும்புக்குந் தன்கையால் எண்சாண்மெய்
என்றுலகோர் இயம்பி னாரே?[7] 50

---

*49. திறம் – திறமைசாலி. சஞ்சீவகன் - ஒரு எருதின் பெயர். இது பொதி சுமக்க முடியாமல் போனபோது வர்த்தகனால் காட்டிலே விட்டுவிக்கப்பட்டது; பின்பு தன் மனம்போல் திரிந்து பலம்பெற்றது. தமரகன் - ஒரு நரியின் பெயர், இது பிங்கலன் என்ற சிங்கத்தின் பிரதானி. இறை - முதன்மை. நரி மித்திரபேதத்தினால் பெரும் பகையை உண்டுபண்ணிச் சிங்கம் எருதைக் கொல்லும்படிக்கு விட்டு விட்டது குளவி - கொட்டும் ஒரு வண்டு.*

*பா - ம்: 1. சறுவபகை, 2. தமிழ்சேர் நாட்டில். 3. கொட்டுவதோ உலகத்தீரே; கொட்டுவதில் உவமைதானே.*

*50. அறம்பெற்ற - அறவழியில்நின்ற சோழன் - ஒரு சோழவரசன். 'மண் உண்ணி மாப்பிள்ளையே' என்று தொடங்கும் ஒருபாட்டு. வெறும் பித்தன் - படிப்பு இல்லாது கூலிவேலை செய்யும் ஒருவன். பொருள் விளங்கச்சொன்ன விதத்தை விநோத ரசமஞ்சரியில் விரிவாய்க் காணலாம். கொண்டான் - (கூலிவேலை செய்பவன் பெற்றுக்)கொண்டான்.*

*4. சோழனைமண்(உண்ணி) மரப்பாவாய் (பாவை) என்றது வோர். 5. சபை அதை நிகராய் வியத்தல் செய்யத், 6. நகரினில் வாழ். 7. எண்சாணென் றுலகிலுள்ளோர் இயம்பு வாரே.*

**நாளை என்பார்க்கு இன்று இல்லை என்பார் நல்லவர்**

வாழிரவி சுதன்வலக்கை யாலெடுத்துக்
கொடுக்குமுன்னே மனம்வே றுமென்(று)
ஏழைமறை யோற்கிடக்கை யாலேயெண்
ணெய்க்கிண்ணம்[1] ஈந்தான் அன்றோ?
ஆழிதனில் பள்ளிகொள்ளு மால்பணியும்
செயங்கொண்டார் அகன்ற நாட்டில்[2]
நாளையென்பார் கொடைதனக்குச் சடுதியிலே
இல்லையென்றல் நலம தாமே[3]. 51

**தீராக்கோபம் போராக முடியும்**

புகழரிச்சந் திரன்நிசவான் எனவசிட்டன்
சொலவவனைப் பொய்ய னாக்க[4]
மிகவெகுண்டு சபதமிட்டே ஆனமட்டும்
பார்த்தயர்ந்து விசுவா மித்ரன்
செகமறிய மக்கனப்பட் டிருந்ததையா[5]
வருமறிவார் செயங்கொண் டாரே!
முகடுமுட்ட வருங்கோபம் துரும்புகுத்த
வேலையென[6] மொழிந்த வாறே. 52

---

51. இரவிசுதன் - கர்ணன், மனம் வேறும் - மனம் வேறுபடும், ஏழை மறையோற்கு - வறுமையுற்று வந்த பிராமணனுக்கு. தனது இருபக்கத்தில் இருந்த பொற்கிண்ணத்தை வலக்கையால் எடுப்பதற்குத் தாமதம் ஆகும் என்று இடது கையால் எடுத்து உடனே கொடுத்தான் என்பது ஒரு கதை. ஆழி - பாற்கடல். பணியும் - வழிபடும், கொடை - ஈகை, சடுதி - விரைவு.

பா - ம்: 1. யாலெண்ணெய்க் கிண்ணமெடுத்(து). 2. மால் பணியும் பொற்பாதச் செயங்கொண்டாரே; மால் பணியும் பொற்பர் செயங்கொண்டார் நாட்டில், 3. இல்லையென்பார் நல்லோர்தானே.

52. நிசவான் - உண்மையுள்ளவன், வெகுண்டு - கோபித்து. சபதம் - உறுதிமொழி. செகம் - உலகம். மக்கனம் - கேலி; இகழ்ச்சி. இருந்ததை - இருந்த செயலை. முகடுமுட்ட வருங்கோபம் - கடுங் கோபம், முகடு - மலைச்சிகரம். துரும்பு குத்த வேலை என - ஒரு சிறு குற்றம் செய்வதுதான் சமயம் என்று.

பா - ம்: 4. சொல்லதனைப் பொய்யதாக்க, 5. அலக்கண் பட் டழிந்ததையா, 6 வேர்க்குமென.

### பெண் என்றால் பேயும் இரங்கும்

அண்ணலருள் சரவணவேள் புனக்குறப்பெண்
வெயிலினிற்கும் அவதி பார்த்துத்
தண்ணுலவு வேங்கைமர நிழலாலன்(று)[1]
அவள்வருத்தந் தனைத்தீர்த் தாரே;[2]
விண்ணவர்க்காய் விடத்தையுண்ட செயங்கொண்டா
ரே! கனந்தான்[3] விளங்கு நாட்டில்
பெண்ணென்றால் பேயுமொக்க இரங்குமென
உலகுள்ளோர்[4] பேசு வாரே. 53

### வெள்ளம் வருமுன்னே அணைகோல வேண்டும்

வள்ளல்கர் ணனின்நாகக்[5] கணைப்புலன்மால்
அறிந்தவன்றன்[6] மாதா வைப்போய்ப்
பிள்ளைகள்மேல் நாகமொரு தரம்விடப்பால்
நிறுத்தெனவும் பேசச் சொல்லித்
தெள்ளியபஞ் சவருயிரைக் காத்தார்தென்
நேமநகர்ச் செயங்கொண் டாரே!
வெள்ளம்வரு முன்னணையைக் கோலிவைப்போர்
காரியங்கள் மிகநன் றுமே. 54

---

53. அண்ணல் அருள் - சிவபெருமான் திருவருளால் தோன்றிய சரவணவேள் - முருகக்கடவுள், புனக் குறப் பெண் - வள்ளியம்மை, அவதி - (தினைப்புனம் காக்கும்) துன்பம், தண் - குளிர்ச்சி, அன்று - அக்காலத்தில் விண்ணவர்க்காய் - தேவர்கள் பொருட்டு, ஒக்க - ஒருசேர, இரங்கும் - வருந்தும்.

1. நிழலாய் நின்று, 2. அவள் வருந்துந் தகைதீர்த் தாரே; அவள் வருத்தம் தணித்தார் அன்றோ, 3. ரே! கனதை, 4. உலகி லுள்ளோர்.

54. வள்ளல் - கணக்கில்லாமல் பொருளைக் கொடுப்பவன். புலன் - நுண்மை. நாகாஸ்திரம் அருச்சுனனுக்குப் பகையாக வளரும் நுணுக் கத்தைக் கண்ணன் அறிந்தான். மால் - கிருஷ்ணன். அவன் - இங்கு அருச்சுனன், மாதாவை - இங்குக் குந்திதேவியை. பிள்ளைகள் - பாண்ட வர்கள். அப்பால் - பிறகு, பஞ்சவர் பாண்டவர். அணை - தடை.

பா - ம்: 5. வள்ளல் கன்னன் கைநாகக். 6. அறிந்தவனின்.

### நீந்தத்தெரியாதவனை வெள்ளங்கொண்டுபோம்

ஆச்சரியம் இரணியன்அட் டாக்கரத்தை
இகழ்ந்தேபொல்[1] லாப்பெண் ணமல்
கூச்சமறத் தள்ளியிர ணியாயநம
என்றதனுல் குலைந்தான் தேகம்;
பேச்சிமுலை யுண்டமுகில் பணிசெயங்கொண்
டாரே! நீர்[2] பெருக்காற் றிற்குள்
நீச்சறியா மாந்தரை[3]வெள் ளங்கொண்டு
போமென்றல்[4] நிசங்கண் டீரே. 55

### மன்னவன் எப்படி மன்னுயிர் அப்படி

நன்னிலத்தி லேருக்மாங்[5] கதராசன்
ஒருவிரதம் நடத்தி னுனென்(று)
அந்நகரும் அவ்விரதந் தொடங்கியதால்[6]
நமனஞ்சி[7] அணுகக் கூடா(து)
என்னயம தண்டனைசே ராதிருந்தார்
செயங்கொண்டார் இலகு நாட்டில்
மன்னவனெப் படியோமன் னுயிருமந்தப்
படியெனவும் வழுத்து வாரே. 56

---

55. ஆச்சரியம் - வியக்கத்தக்க (வாழ்க்கையும் பலமும் உடைய), அட்டாக்கரம் - நாராயண மந்திரம். பொல்லாப்பு - தீங்கு, தேகம் குலைந்தான் - (நரசிம்ம மூர்த்தியால்) உடல் பிளக்கப்பட்டு உயிர் துறந்தான். பேச்சி - பூதகி என்னும் அரக்கி. முகில் - கண்ணனாகிய திருமால். நீர் பெருக் காற்றில் - வெள்ளம் பெருகி ஓடும் ஆற்றில். நீச்சு - நீந்துதல். நிசம் - உண்மை.

பாடம்: 1. இகழ்ந்தான்போல், 2. டாரே! நீள். 3. மைந்தரை, 4. போமென்பார்; போமென்பது.

56. ஒரு விரதம் - ஒப்பற்ற ஏகாதசி விரதம். நடத்தினன் - நடப்பித்தான். தொடங்கியது - ஆரம்பித்து நடத்தியது. நமன் - எமன், அணுகக்கூடாது என்ன - வரவொட்டாதபடி விரட்டித் துரத்தியது என்று யாவரும்). இலகு - விளங்குகின்ற, மன்னுயிர் - நிலைபெற்ற மக்கள் உயிர்.

பாடம்: 5. நன்னிலத்திலுருக்குமாங், 6. மேற்கொண்டதால், 7, நமன் அவரை.

### கடுகு சிறுத்தாலும் காரம் போகாது

அடவிசென்று நகரிழந்து வறுமைதங்கி
உடல்மெலிந்தே[1] அம்மான் ஊர்வந்
திடவுமம்மான் ஏவலினுல் அமைச்சரழைத்
திடவருவ திலேபோ என்ற
திடநளனை மாமனெதிர்[2] கொண்டழைக்கச்
சம்மதித்தான் செயங்கொண் டாரே!
கடுகுசிறுத் தாலுமென்ன காரம்போ
காதெனவும் கழறு[3] வாரே. 57

### காதம் ஓடியும் முயல்தான் கைத்தூக்கு

பூதலமும் பொன்னுலகும் ஏவல்கொண்ட
சூரனரன் புதல்வற் கஞ்சிச்
சூதமர மாய்ஒளித்துக் கடைசியிற்செவ்
வேள்கரத்தில் துசமா னுனே;[4]
தாதவிழும் கொன்றையணி செயங்கொண்டா
ரே! செடியைத் தாண்டித் தாவிக்[5]
காதமோடி னுமுயற்குக் கைத்தூக்கென்(று)
உலகிலுள்ளோர் கருது வாரே.[6] 58

---

*57. அடவி - காடு. நகர் - மாவிந்த நகர். வறுமைதங்கி - (புட்கரனேடு சூதாடி) வறுமையடைந்து அம்மான் - மாமன்; வீமராசன் ஊர் - இங்குக் குண்டினபுரம். அமைச்சர் - மந்திரிமார். திடம் - மனவுறுதி. சம்மதித்தான் - உடன்பட்டு மனைவி மக்களை அடைந்தான். சிறுத்தல் - வற்றுதல். காரம் - அதற்குள்ள குணம்.*

*பா - ம்: 1. உடல் மெலிந்து, 2. வீமனெதிர்; ராசனெதிர், 3. கருது.*

*58. பூதலம் - பூமி. பொன்னுலகு - சுவர்க்கம். ஏவல்கொண்டு - அடிமைகொண்டு துன்புத்திய. சூரன் - சூரபன்மன். அரன்புதல்வற்கு - சண்முகக் கடவுளுக்கு. சூதமரம் - மாமரம். ஒளித்து - கடல் நடுவில் மறைந்து. செவ்வேள் - முருகக்கடவுள். துசமானுன் - சேவற் கொடியானுன்; தும்சமானுன் என்று பாடங்கொண்டால் சூரன் உடல் அழிந்து சேவலும் மயிலும் ஆகி. மயில் வாகனமாகவும் சேவல் கொடியாகவும் முருகனுக்கு ஆனுன் என்க. தாது - மகரந்தம். காதம் - பத்து மைல்.*

*பா - ம்: 4 வேள்கரத்தால் தொலையலுற்றுன், 5. தாவித்தாவி, 6. கழறுவாரே.*

**மாமியார் தலையில் கையும் வேலிப்புறத்திலே கண்ணும்**

பூமிதனில் சிலர்நீறிட் டிரு[1]கரமுங்
குவித்திருகண் பொத்திக் கொண்டே
காமியர்க ளாய்ப்பொருள்மேல்[2] மனங்கிடக்க
வாயிலரா ஹரவென் ருற்போல்
நேமியணி வோன்தேட அரியபதச்
செயங்கொண்டார் நிமலர்[3] நாட்டில்
மாமிதலை மேற்கையும் வேலிப்புறத்
தினிற்கண்ணும் வைத்த வாறே. 59

**ஒன்றைத்தீர விசாரிப்பதே நலம்**

பெண்ணிறக்கத் தொங்கலம்பால் வில்வேடன்
அடுத்துவரப் பெண்ணுக் காளன்
கொன்றதுநீ என்றிழுக்க மதுரையிற்சுந்
தரர்நியாயம் கொடுத்துத் தீர்த்தார்;
அண்ணலர னே ![4]செயங்கொண் டாரே !கா
தாரக்கேட் டதும்[5]பொய் யாகும்
கண்ணுரக் கண்டதும்பொய் தீர்க்கவிசா
ரிப்பதுமெய் காணுந் தானே. 60

---

59. நீறு - விபூதி. கண்பொத்தி - கண்ணை மூடிக்கொண்டு. காமியர்களாய் - உலகாசை மிக உடையர்களாய். பொருள் - செல்வம்; இன்னும் மண். பெண் இவற்றையுங் கொள்க. மனம் கிடக்க - மனம்பற்றி நிற்க. நேமி அணிவோன் - திருமால். நேமி-சக்கரம். தேட- (பன்றி வடிவுகொண்டு பூமியைத் தோண்டிச் சென்று) தேட. அரிய கிடைப்பதற்கு) அருமையான. நிமலர் - பரிசுத்தர்; கடவுள்.

பா - ம்: 1. சிலருண்டு இரு. 2. காமியர்கண் மேற்பொருள்மேல். 3. நேம.

60. பெண் - திருப்புத்தூரிலிருந்து கணவனுடன் செல்லும் கர்ப்பிணியாகிய பிராமணப் பெண், தொங்கல் - ஆலமரக் கிளையில் தொங்கிக்கொண்டிருந்த, அம்பால் - அம்பினால், பெண்ணுக்காளன் - கணவன். இழுக்க - பிடித்து இழுக்க. மதுரையில் சோமசுந்தரர் நியாயம் கொடுத்த வரலாற்றைத் திருவிளையாடற் புராணம் பழியஞ்சிய படலத்தில் காண்க. அண்ணல் - பெருமை தங்கிய

பா - ம்: 4. அண்ணலழ லேந்தி. 5. காதாற் கேட்டதும்.

### ஆற்றோடே போனாலும் போவதல்லால் ஓடக்காரனுக்கு அரைக் காசும் கொடுக்கிறதில்லை

கூறுமர வக்கொடியோன் பாண்டவருக்(கு)
ஐந்திலமும்[1] கொடுக்கேன் என்று
வீறுசொன்னான் சுடக்கொடுத்த[2] பின்னுயிரோ(டு)
உலகமுற்றும் விட்டான் அன்றோ?
நீறணிமெய்ச் செயங்கொண்டா ரே! ஆற்றோ
டேமூடர் நேர்போ னாலும்
போறதல்லால்[3] ஓடக்கா ரனுக்கரைக்கா
சுங்கொடுக்கப் பொருந்தி டாரே. 61

### தாய்க்கு விளைந்தாலும் தனக்கு விளையவேண்டும்

வேய்க்குமகன் மூத்தபிள்ளை கரத்தினில்மாங்[4]
கனிகொடுக்க வெகுண்டு வேலர்
வாய்க்கினிய கனிதமக்கு வாய்க்கவில்லை
எனவிரைந்து[5] மலைமேற் சென்றார்;
பாக்கியஞ்செந் தமிழ்க்குதவுஞ் செயங்கொண்டா
ரே! விதைத்த பழனந் தோறும்
தாய்க்குவிளைந் தாலுமென்ன தனக்குவிளைந்
திடவேண்டித் தவஞ்செய் வாரே. 62

---

61. கூறும் - (புகழ்ந்து) கூறப்பெறும். அரவம் - பாம்பு. ஐந்து இலம் - ஐந்து வீடு. கொடுக்கேன் - கொடுக்கமாட்டேன். வீறு - இறுமாப்புடன். சுடக்கொடுத்தபின் - யுத்தத்தில் தாக்கியபொழுது. விட்டான் - விட்டு விட்டான். மெய் - உடல். மூடர் - அறிவில்லாதவா. போறது - போகின்றது. பொருந்திடார் - மனம் சம்மதியார்.

பா - ம்: 1. ஐந்நிலமும். 2. சமர்கொடுத்த. 3. போதணி மெய்ச் செயங்கொண்டார் பொன்னாட்டில் ஆற்றோடே போவதல்லால் (ஆற்றோடே போனாலும் போவதல்லால்.)

62 வேய் - மூங்கில். வேய்க்குமகன் - மூங்கிலிடத்துத் தோன்றிய சிவபெருமான். மூத்த பிள்ளை - விநாயகர். மாங்கனி - மாம்பழம்; இது நாரதரால் கொண்டுவந்து சிவபெருமானுக்குச் சமர்ப்பிக்கப்பெற்றது. வெகுண்டு - (கயிலை மலையை (உலகத்தை)ச் சுற்றி ஓடிவந்து பயன் கிட்டாததனால்) கோபங்கொண்டு வேலவர் - முருகக்கடவுள் வாய்க்கவில்லை - கிடைக்கவில்லை. மலைமேல் - பழநிமலையின்மேல். பாக்கியம் - சகல செல்வங்கள். பழனம் - வயல்.

பா - ம்: 4. கையில்மாதுளை. 5. கனி நமக்குத் தரலையென்று கோபமுடன் (வாய்க்கவில்லை எனவெகுண்டு.)

### குலவித்தை கல்லாமலே பாதிவந்துவிடும்

பெலமுற்ற[1] சிங்கமொரு கன்றீனும்
படியெழுதிப் பின்னே செம்பொன்
விலைபெற்ற கரியைஅரிக் கன்றுதுள்ளிப்
பாய்ந்தகதை மெய்யாம் என்றே
சிலைபெற்ற கூளப்பன்[2] விறலிதனில்
விளங்குதன்றே செயங்கொண் டாரே!
குலவித்தை கல்லாமல் பாதிவரும்
என்றுலகோர் கூறு வாரே[3]. 63

### கொன்றாரைக் கொல்லும் கொலை

தண்ணார்மீன் களைச்சர்வ சீவதயா
பரபகந்தான் தயவாய்ப் பேசி
எண்ணாமல் சிதைத்தபழி[4] தனக்கலவன்
பகக்கழுத்தை இடறிற் றன்றே;
பண்ணார்சிந் தாமணியில் விளங்குதன்றே[5]
செயங்கொண்டார் பரவு நாட்டில்
கொன்றாரைக் கொல்லுமல்லாமல் கொலைவிடா
தென்றுலகோர் கூறு வாரே[6]. 64

---

*63.* பெலம் - பலம்; வலிமை. ஒருகன்று - ஒரு குட்டி. ஈனும் படி - போடும்படி. விலைபெற்ற - விலைபெறும். • கரி - யானை. அரிக் கன்று - சிங்கக்குட்டி. கதை - வரலாறு; அது சகல கலைகளையும், பாஷைகளையும், மதன நூல்களையும் நன்கு கற்றறிந்த, ஒரு ராச கன்னியை ஒருவன் முறைப்படி மணந்து இருவரும் படுக்கையில் சரச சல்லாபமாய் இருக்கும்போது கணவன் இவள் மதனநூல் முறையில் அனுபவங்களைக் காண்பிக்கின்றாளே, புதுப்பெண் ஆயிற்றே; இவள் முன் யாரிடமேனும் இருந்திருக்கவேண்டும்' என்று ஐயங்கொண்ட போது ராச கன்னிகை மேலே குறிப்பிட்ட சித்திரத்தை வரைந்து தெளிவுபடுத்தினாள் என்பதாம். சிலை - வில். கூளப்பன் - கூளப்ப நாயக்கன் காதல். விறலி - விறலிவிடுதூது.

பா - ம்: *1.* பிலமுற்ற. *2.* கூளேந்த்ரன். *3.* என்றுலகம் கூறுந் தாமே.

*64.* தண் - குளிர்ச்சி. சர்வசீவதயாபரபகம் - சர்வசீவதயாபரன் என்னும் கொக்கு. தயவாய் - அன்பாய். எண்ணாமல் - கணக்கில்லாமல். அலவன் - நண்டு. பகக்கழுத்தை - கொக்கின் கழுத்தை. இடறிற்று - கத்தரித்தது. பரவு - பரவிய. துதிக்கின்ற.

பா - ம்: *4.* சதித்தபழி. *5.* விழுந்ததன்றே. *6.* தென்றுலகம் கூறுந் தானே(கூறுங் காலே).

## மலையைத் துளைக்கச் சிற்றுளி போதாதோ ?

உலகமெல்லாம் உடல்சிறுத்துஞ்[1] சிறியவா
மனன்அளந்தான் ஒருபா தத்தால்
அலகையின்காத் திரமழியக் கடல்வண்ணன்[2]
பாலருத்தி அவளை மாய்த்தான் ;
சிலைநுதலாள் சவுந்தரநா யகியையிடப்
பாகம்வைத்த செயங்கொண் டாரே!
மலைபெரிதா னாலுமென்ன சிற்றுளிக்குப்
பயன்சனிக்கும் வண்மை தானே.

## வருமுன்னர்க் காத்தல் வேண்டும்

காவலன்புட் கரன்நளனைச் சூதாட
வரவழைத்த[3] கபடங் கண்டே
மேவியசூ தாடாமல் தள்ளிவிட்டால்
சனிநளனை வினைசெய் வானோ?
வாவிதிகழ் தென்நேமச் செயங்கொண்டா
ரே! மிகுந்த வளஞ்சேர் நாட்டில்
நாவிதன்செய் தியையறிந்து குடுமியைப்பத்
திரப்படுத்தல் நலமென் பாரே.

---

65. சிறிய வாமனன் - வாமனவதாரமூர்த்தி. உலகமெலாம் ஒரு பாதத்தால் அளந்தான் என்க. அலகை - பூதகி. காத்திரம் - உடல். கடல் வண்ணன் - கிருஷ்ணன். சனிக்கும் - உண்டாகும். வண்மை - வளமை.

பா - ம் : 1. உலகிடவி சாலமென்ன. 2 திரங்களென்ன வாலகிருஷ்ணன்.

66 காவலன் புட்கரன் - புட்கர அரசன். கபடம் - வஞ்சனை. சூது - சூதாட்டம். சனி - சனி பகவான். வினை - (மனைவி மக்களைப் பிரிந்து, காட்டிலே அலையும் துன்பச்)செயலை. செய்வானோ - செய்யமாட்டான் என்றபடி. வாவி - நீர்நிலை ; தடாகம். நாவிதன் - அம்பட்டன்.

பா - ம் : 3. வரவழைக்கும்.

**கம்மாளன் பசுவைக் காதறுத்து வாங்கவேண்டும்**

சிம்மாச னன்குமணன் சிரம்போலே
விழிமூக்குச் செவிவாய் வைத்துச்[1]
சம்மாரம் பண்ணிரத்தஞ் சொரிவதுபோல்[2]
கொடுத்ததுவும் தட்டான்[3] அன்றோ?
பெம்மானே! தென்நேமச் செயங்கொண்டா
ரே! மலையைப் பிரட்டுங் கையான்
கம்மாளன் பசுவைத்தான் காதறுத்துக்
கொள்ளுமெனக் கழறு வாரே. 67

**வாயாலே ஒருவன் கெடுவான்**

கொடியையிரண் டோதிமங்கௌ விப்பறக்க
நடுக்கூர்மங் குலவிச் செல்கால்[4]
நொடியிலொரு செய்திசொல வாய்திறந்(து)ஆ
மையும்விழுந்து நொறுங்கிற் றன்றே;
வடிவுளதந் திரக்கதையு முண்டுசெயங்
கொண்டார்வாழ் வளஞ்சேர்[5] நாட்டில்
நெடுங்கிணறும் வாயாலே தூறுமென்றே
சொல்லுவர்கள்[6] நிசங்கண் டீரே. 68

---

67. சிம்மாசனன் - சிங்காதனத்தில் வீற்றிருக்கும் அரசனாகிய. குமணன் - குமணன் என்பவன். இவன் சிறந்த கடையெழு வள்ளலில் ஒருவன். சம்மாரம் பண்ணி - வெட்டியதுபோல் செய்து. கொடுத்த துவும் - (இளங் குமணனிடம்) அளித்ததுவும் இது உலகில் வழங்கும் கட்டுக்கதை. புறநானூற்றில் இதன் நிகழ்ச்சி வேறு; ஆங்குக் காண்க. பிரட்டும், புரட்டும் - கீழ்மேலாகத் திருப்புதல்.

பா - ம்: 1. செய்து. 2. ரத்தச்சோரி சிந்தக். 3. தச்சன்.

68. கொடி - தாமரைக் கொடி. இரண்டு ஓதிமம் - இரண்டு அன்னங்கள். நடு - (கொடியின்) நடுப்பாகத்தில். கூர்மம் - ஆமை. குலவி - மகிழ்ந்து. செய்தி - வார்த்தை (உலக மக்கள் இஃது என்ன அதிசயம். ஒரு கொடியை இரண்டு அன்னங்கள் பற்ற நடுவில் ஆமை வாயினால் கௌவிக்கொண்டு போகிறதே என்று கூறி ஆரவாரஞ் செய்தபோது ஆமை இஃது என்ன கூச்சல் என்று அன்னத்தைக் கேட்க வாயினைத் திறந்து பேசும் வார்த்தை ஆகும்.)

பா - ம்: 4. கொடியினிலே ஓதிமங்கள் கவ்விடவே பறக்க நடுக் கூர்மம் கொள்ள. 5. தந்திரக் கதையில் விளங்கியதால் செயங்கொண்டார் வளமார். 6 சொல்லுவர் தாம்.

**அம்பு தைத்திருக்கையில் ஆணிமேலும் வருத்தலாகாது**

சம்புகுரு[1] வசிட்டர்பகை மிகுந்திருக்கும்
போதுதிரி சங்கு ராசன்
வம்புரைத்த கோசிகரால் சொர்க்கமதில்
ஏறியதால் மகிமை யுண்டோ?
சம்புமகா தேவ! செயங் கொண்டாரே!
எதிராளி தனுவால் எய்த
அம்புவிழக் கையிலிழை கட்டிட்டால்[2]
மெய்யினிற்புண் ஆறி டாதே. 69

**இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?**

கூச்சமற மாவலிபூ மியைக்கொடுக்க
மால்வாங்கக் குறுக்கே சுக்ரன்
பேச்சறியா மல்பேசிக் கண்ணிழப்பா
னேல்ஒதுங்கிப் பிழைக்கொண் ணுதோ?
ஆச்சரியம் செயங்கொண்டா ரே! இலங்கா
புரிராமர்[3] ஆண்டா லென்ன?
ஏச்சிலரக் கர்களாண்டா லென்னென்று
குரங்கந்நாள் இருந்த தன்றே[4]. 70

---

*69.* சம்பு குரு - நன்மையைச் செய்கின்ற குருவாகிய. பகை - இங்குச் சாபம். திரிசங்கு, தன் குருவாகிய வசிட்டரிடம் தன்னைச் சரீரத்துடன் சுவர்க்கம் ஏற்றிவைக்க வேண்டுமென்ற போது, அவர் மறுக்க அரசன் கோபித்துக் கூறியபோது வசிட்டர் நீ நீசனாகக் கடவாய் என்று சபித்துச் சென்றார். வம்பு - வீண் பேச்சு. கோசிகர் - விசுவாமித்திரர். ஏறியது - வேள்வி மூலம் ஏறியது. மகிமை - பெருமை. தனு - வில். இழை - நூல்; துணி.

பா - ம்: 1. நம்பு ரு. 2. அம்புகிடக் கையிலாணைக் கட்டினுல்.

*70.* கூச்சம் அற - (பின்வரும் தீமைக்கு) அஞ்சாமல். மாவலி - மாவலிச் சக்கிரவர்த்தி. கொடுக்க - (தானமாக நீர் வார்த்து) அளிக்க. மால் - திருமாலாகிய வாமனன். சுக்ரன் - சுக்கிர பகவான்; அசுர குரு. வந்தவன் பிராமணன் அல்லன்; திருமால்; உன்னைக் கெடுக்க இவ்வடிவுடன் வந்தான். அவனுக்குக் கேட்டதை நீ கொடுக்காதே என்று கூறியதுவே பேச்சறியாமல் பேசியதாகும். இலங்காபுரி - இலங்கையின் ஆட்சி. எச்சில் என்பது ஏச்சில் என நீண்டது. எச்சில் - இகழ்ச்சியையுடைய. குரங்கு - குரங்குப் படைகள். இராவணன் மூல பலத்தைப் போருக்கு அனுப்பியபோது வானரப் படைகள் அதனைக் கண்டு பயந்து "இலங்கையை ராமன் ஆண்டால் என்ன? அரக்கர் ஆண்டால் என்ன?" நாம் காட்டில் சென்று காய்கனி தின்று உயிர் வாழ்வோம் என்று எண்ணி வருந்தின.

பா - ம்: 3. இலங்கை நகர் தனைராமர் 4. மாச்சரிய முடைய இரா வணனுண்டால் என்னவென்று வழுத்து வாரே.

## மானம் இழந்த பின் வாழாமை வேண்டும்

நீரெடுத்தோர் கலசமதில் சௌசமுஞ்செய்
    தொருவன்வந்தான் நெடுநாட் கும்பம்[1]
பாரில்விழுந் துடையவின்னும் ஒருகலசம்
    என்மானம் பார்க்கும் போது
சீரலவென்(று)[2] அழுதானென்(று) ஒருகதைசொல்
    வார்நேமச் செயங்கொண் டாரே!
ஆரெனினும் மானமிழந் துயிர்காப்ப(து)
    என்ன[3]வென்பார் அவனி யோரே. 71

## நெருப்பைக் கண்டேனும் காணுமலேனும் தொடின் சுடும்

விருப்பமறை யோன்தனக்குப் பிறந்தநிரு
    தனையுவணன் விழுங்க[4] வாயில்
நெருப்பெழச்[5]சுட் டதனுல்செங் கருடன்கக்
    கிவிடுத்தான் நிருதனை என்று[6]
திருப்பதிவேங் கடசதகந் தனிலுரைத்தார்
    முன்பெரியோர் செயங்கொண் டாரே!
நெருப்பிருப்ப தறியாமல் தொட்டாலுஞ்
    சுடுமெனவே[7] நிகழ்த்து வாரே. 72

---

*71.* ஓர் கலசம் - ஒரு மண் பாத்திரம் சௌசம் - (மலங்கழித்துச்) சுத்தம் செய்தல். மானமுள்ள ஒரு வர்த்தகன் எனது மானத்தை உடைந்த கலயம் பார்த்ததே அல்லாமல் வேறு ஒரு கலயம் இனிப் பார்ப்பது முறையன்று என்று அழுதான் என்பது வரலாறு. மானம் - உயர்வு. அவனியோர் - உலகோர்.

பா - ம் : 1. நெடுநாட் பின்னர். 2 சீரிலை என்று. 3. மான மழிந் திடி லுயிர்காத் தென்ன பயன் (லுயிர்காவ லென்ன).

*72.* விருப்ப மறையோன் தனக்கு - காமவிச்சையில் மிகுந்த ஒரு பிராமணனுக்கு நிருதன் - (கிரவுஞ்சத் தீவில் அரக்கர் கூட்டத்தி லிருந்த) அரக்கன். உவணன் - கருடன். அக்கினி ஹோத்திரப் பிராமணனுக்குப் பிறந்த அரக்கன் அக்கினிபோல் சுடலானன்; அதனல் கருடன் அவனைமட்டும் கக்கிவிட்டான் என்க. திருப்பதி - திருவேங்கடமலை. உரைத்தார் - சொன்னுர்.

பா - ம் : 4. விழுங்கும். 5. நெருப்பெனச்- 6. கருடன் நிரு தனை விடுத்தான் எனவோர் பாட்டில். 7. சுடுமெனவும்.

### செய்தவினை செய்தவனையே அடையும்

கையினிற்பட் டினத்தார்க்குத் தமக்கைநஞ்சு
கலந்துபல காரஞ் செய்தே[1]
ஐயமறக் கொல்லவென்றே கொடுக்கஅவள்
மனைநெருப்பால் அழிந்த தன்றோ ?
துய்யபினு கச்சிலையீர் ! செயங்கொண்டா
ரே !பிறர்க்குத் துன்பங் காணச்
செய்ததீ வினைதானும் செய்தவர்க்கே
சேருமெனச்[2] செப்பு வாரே. 73

### மந்திரங்கால் மதிமுக்கால்

சிந்தைமகிழ் விக்கிரமா தித்தனுக்(கு)ஆ
யிரவருடம் தேவி ஈந்தாள்;
புந்திவலு[3] மந்திரிசொல் லால்இரண்டா
யிரவருடம் புவியை ஆண்டான்;
சுந்தரற்குத் தூதுசென்ற செயங்கொண்டா
ரே !தருமம் துலங்கு நாட்டில்
மந்திரங்கால் மதிமுக்கால் என்றுலகந்
தனிலுள்ளோர் வழுத்து வாரே. 74

---

73. பட்டினத்தார் - பட்டினத்தடிகள். தமக்கை - அக்காள். இவள் தன் தம்பி மருதவாணரது அருளால் ஞானமுற்றுப் பெருந் துறவு பூண்டதை அறியாமல், அவன் கண்ட இடத்தில் வாங்கிப் புசிக்கின்றானே நமக்கு நாணமாக இருக்கிறதே என்று கருதிக் கொல்ல எண்ணி, அப்பத்தில் விஷம் கலந்து உண்ணக் கொடுத்தாள். பட்டினத்தார் அப்பத்தை வாங்கி ஞானக் கண்ணால் நோக்க உண்மை யறிந்து, 'தன் வினை தன்னைச் சுடும்; இந்த ஓட்டப்பம் வீட்டைச் சுடும்' என்று கூறித் தமக்கை வீட்டின்மேல் வீச வீடு எரிந்து அழிந்தது என்பதாம். துய்ய - பரிசுத்தமான - பினுகச்சிலை - பினுகம் என்ற பெயருடைய வில்.

பா - ம் : 1. செய்து. 2. சாருமெனச்.

74. விக்கிரமாதித்தன் - விக்கிரமாதித்திய அரசன். தேவி - பத்திரகாளி. ஈந்தாள் - வரமளித்தாள். வலு - வலிமை, இங்கு நுணுக்கம். மந்திரி - பட்டி என்ற பெயருடைய அமைச்சன் ; மந்திரியின் சொல்லால் அரசன் நாடு ஆறு மாதமும் காடு ஆறு மாதமும் இருந்து, அரசு ஆண்டான் என்பதாம். சுந்தரர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள். தூது சென்ற - பரவையாரிடம் தூதுபோன.

பா - ம் : 3 புத்திவலி.

### பசுத்தோல் போர்த்த புலி

நிசகாளி தாசனரண் மனைவாசல்
புகவேண்டி நிருபன் கீர்த்தி
சுசிதூசிப்[1] பல்போலென் றுரைத்ததனுல்
செல்லவிட்டார் தோன்றப் போவென்(று)
திசைமணக்கக்[2] கீர்வாணம் போசன்மேல்[3]
பகர்ந்தனன்காண்[4] செயங்கொண் டாரே!
பசுமாட்டுத் தோலதனைப் புலிபோர்த்துக்
கொண்டிருந்த பண்பு தானே. 75

### சாகத்துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்காலளவு

யாகத்தால் செயமுமில்லை இறப்பதினி
நிச்சயமே என்ற பெண்ணே ![5]
லோகத்தார் இராமாஎன்[6] றுரைக்குமட்டும்
இராவணனென்(று) உரைப்பார்; போர்க்குப்
போகத்தான் துணிந்தனன்என் ருன்அரக்கன்;[7]
சயங்கொண்டார் பொருந்து நாட்டில்[8]
சாகத்தான் துணிந்தவற்குச்[9] சமுத்ரமுழங்
காலளவு தான்என் பாரே. 76

---

75. நிச காளிதாசன் - உண்மைக் கவித்துவம் காளியருளால் பெற்ற அடியவன்; புலவன். அரண்மனை - போசராசன் அரண்மனை. நிருபன் - போசராசன். சுசி தூசிப் பல்போல் - வெள்ளைக் குதிரையின் பற்கள்போல். திசை மணக்க - எட்டுத் திசைகளிலும் புகழ் பரவ. கீர்வாணம் - வடமொழி. பகர்ந்தனன் - (கயிலை போலவும், பாற்கடல் போலவும், அன்னம் போலவும் ஒரே வெண்மையாகப் போசன் கீர்த்தி விளக்க வடமொழியில் நான்கு சுலோகம்) கூறினன். பண்பு - தன்மை.

பா - ம் : 1. சுகனுசி ; சுகநாசி. 2. இசைவாங்க ; இசை வாங். 3. போசன் றன்மேல். 4. பகர்ந்தனனே.

76. யாகத்தால் - (இந்திரசித்து செய்த) நிகும்பலை வேள்வியால் பெண்ணே - மண்டோதரியே. என்ருன் அரக்கன் - என்று இராவணன் கூறினுன். சாகத்தான் - இறக்க.

பா - ம் : 5. நிசமெனச் சொன் னவளைப் பெண்ணே ; நிசமெனக் கொளென்னைப் பெண்ணே 6. இராமனென. 7. துணிந்தனென்ருன் அரக்கனதால், 8. பொறுப்பாய் எண்ணிச். 9. துணிந்தவர்க்குச்.

### வித்துவான் மதயானையை ஒப்பாவான்

அத்தனே ! நீ[1] கரத்தெழுதி அடிமைக்கீந்
திட்டசெய்யுள் அதனை நோக்கிச்
சற்றுந்தா மதியாமல் இயற்கைமணம்
கூந்தலுக்குத் தகுதி என்றல்
குற்றமெனப் பயமின்றி உரைத்தனர்நக்
கீரர்செயங் கொண்டா ரே ![2]சொல்
வித்துவானும் மதகரியும் ஒப்பாமென்(று)[3]
உரைப்பதுவும் மெய்ய தாமே. 77

### காமுகர்க்குக் கண்டவிடத்துக் கண்

உச்சிதமாய்த் துரோணரது சொல்லின்மேல்[4]
அவர்மனையாள் உடையில் லாமல்
பிச்சையிடக் கொள்சிவனுக்(கு) அக்கணமே
இந்திரியம் பிறந்த[5] தன்றோ ?
தெக்கணமா முனிபரவுந் தென்நேம
நகரில்வளர் செயங்கொண் டாரே !
இச்சையுள்ள காமுகர்க்குக் கண்கண்ட[6]
இடத்தினிலென்(று) இயம்பு வாரே. 78

---

77. அத்தனே - இறைவனே. அடிமைக்கு - நாடோறும் பூசிக்கும் தொண்டு பூண்ட தருமிக்கு. ஈந்திட்ட செய்யுள் - அளித்திட்ட பாடல்; அது 'கொங்கு தேர் வாழ்க்கை' என்ற பாடல். என்றல் - என்று கூறுதல். நக்கீரர் - இவர் கடைச் சங்கப் புலவர்களில் ஒருவர், நக்கீரர் இறைவனுடன் வாதாடிய வரலாறு சீகாளத்தி புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றில் காண்க. மதகரி - மதயானை.

பா - ம் : 1. அத்தநீ. 2 அத்தர்கையா லெழுதவுமை விளக்கேந்த வாதவூர் அண்ணல் சொன்ன, நத்துதிருக் கோவைதனைத் தமிழ்மதுரைச் சங்கத்தார் நாவில் ஒன்று, குத்தமெனத் தள்ளினர் சற் றும்பயமில் லாமல்செயங் கொண்டாரே. 3. வித்துவான் மதயானை இரண்டு மொப்பென்(று).

78. உச்சிதமாய் - தகுதியுடன். துரோணர் தம் மனைவியிடம் 'தற்போது நம் இல்லம் வந்தவர் பிராமண சந்நியாசி; கரை கண்ட ஞானி; மிக வயோதிகர். நிர்வாணமாகப் பெண் உணவு படைத்தால் தான் அவர் உண்பாராம்; அவருக்கு உணவு படைப்பது விசேடம்' என்று சொல்லத், துரோணர் மனைவி அவ்வாறே செய்தனள் என்பதாம். சிவன் - பிராமண சந்நியாசியாக வந்த சிவபெருமான். பிறந்தது - வெளிப்பட்டது. இறைவன் இந்திரியத்தைப் புல்லோடு குதிரைக்குக் கொடுக்க, அது உண்டு அசுவத்தாமாவைப் பெற்றது என்பது பாரதக் கதை. தெக்கணமா முனிவர் - அகத்தியர்.

பா - ம் 4. துரோணர்சொன்ன மொழிப்படியே. 5. பிரிந்த. 6. காமனுக்குக் கண்ணு கண்ட.

### கட்டப்பாலை முற்றப்பழுக்காது

மெத்தவே நாள்[1] வாதாபி வேதியர்கள்
உயிரையுண்டு மேவிக்[2] கும்பச்
சித்தனைச்சாப் பிடநினைந்தான் சித்தனவ
னுயிரைமுற்றுஞ்[3] சிதைத்து விட்டான்[4]
மத்தகசந் தனையுரித்த செயங்கொண்டா
ரே !யார்க்கும்[5] மனத்துக் கேற்க[6]
நித்தியங்கட் டப்பாலை முற்றவுந்தான்
பழுத்திடுமோ ? நிலத்து மீதே.[7] 79

### மனிதன் பேராற்றல் படைத்தவன்

பார்புகழும் பாண்டியர்க்குச் சங்கத்தார்
பேரறிவால் பகர வொண்ணு[8]
நாரைமூக் குக்குவமை பனங்கிழங்கென்(று)[9]
ஒருபுலவன் நவின்றான் அன்றோ ?
சீருலவுங் கங்கைதிங்கள் அக்கரவு[10]
கொன்றையணி செயங்கொண் டாரே !
காருலவும் புவியிலுள்ளோர் ஆகாசந்
தனையும்வடி[11] கட்டு வாரே. 80

---

79. மெத்தவே - மிகுதியாகவே. நாள் - ஒவ்வொரு நாள். வாதாபி - இவன் சூரபன்மனின் தங்கையான அசமுகியின் இளைய புதல்வன்; மாயாசாலங்களில் வல்லவன்; இவனின் மூத்தவன் வில்வலன். கும்பச் சித்தனை - அகத்தியரை. அவன் உயிரை - வாதாபி உயிரை. வில்வலன் தன் தம்பியான வாதாபியை ஆடாக்கி அறுத்துச் சமைத்து அகத்தியர்க்குப் படைத்தான்; அவரும் உண்டு மகிழ்ந்தபோது வில்வலன் 'வாதாபி' என்று அழைக்க அவன் அகத்தியர் வயிற்றினுள் இருந்து 'வந்துவிட்டேன்' என அகத்தியர் உடனே வயிற்றில் கையைத் தடவி 'வாதாபி ஜீர்ணம்' என்று கூற அழிந்தான். மத்தகசம் - மதங்கொண்ட யானை. கட்டப்பாலை - ஒருவகை மரத்தின் காய்.

பா - ம் : 1. மெத்த நாள். 2. வேதியர்களை யுண்டு வந்தோமெனவே. 3. உயிரை மட்டும்; உயிர்தன்னை. 4. போட்டான். 5. செயங்கொண்டார் உலகுதனில் 6. கேற்ப. 7. ளோரே.

80. சங்கத்தார் - சங்கப்புலவர் பகரவொண்ணு - கூறமுடியாத. ஒரு புலவன் - சத்திமுற்றப் புலவன். நவின்றான் - பாடலாகக் கூறினான். அது, ''நாராய் நாராய்'' என்ற செய்யுள். திங்கள் - சந்திரன். அக்கு - உருத்திராட்சம். கார் - மேகம்.

பா - ம் : 8. பகரொண்ணாத. 9. பனங்கிழங்கென்றே. 10. அரவமொடு. 11. தனையும்வரை.

## மனமொன்றிப் பிடித்தவர்க்குப் பேறு உண்டு

ஆரூரெல் லையில்மிதியேன் என்றவிறன்
    மிண்டர்தனை அரன்சோ தித்துப்[1]
பாரிலொரு கால்மிதிக்கச் செய்ததுகண்
    டக்காலைப் பதறி வெட்டும்[2]
சீருவந்து[3] சிவன்காட்சி கொடுத்தானன்
    றோ ?நேமச் செயங்கொண் டாரே!
பேருலகில் மனங்கலங்கிப் பிரியாமல்
    பிடித்தவர்க்குப் பேறுண் டாமே. 81

## இறையவன் அடியவர் மனத்தில் என்றும் இருப்பன்

உற்றசெந்[4]நாப் புலவராங்கணி கண்ணன்தான்[5]
    கோபமதாய் உலகுண் டோனை
இற்றையாம் புறப்படுவோம்[6] இனியுன்பாய்
    சுருட்டியெழுந் திருமென் றோதச்
சித்தசன்தன் தாதை[7]வர தப்பெருமாள்
    எழுந்தனரே செயங்கொண் டாரே!
பத்தருளத் தினிலீசன் குடியிருப்பான்
    எனச்சொல்லும் பண்பு தானே.[8] 82

---

81. ஆரூர் - திருவாரூர். விறன்மிண்டர் - இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். சுந்தரர் பரவையார் இல்லத்திற்குச் சென்று அப்படியே சிவதரிசனத்திற்கு வருகின்றார்; தேவாசிரிய மண்டபத்தி லுள்ள அடியார்களை வணங்காது புறம்பாகச் செல்லுகின்றார். அதனை இறைவன் கவனிப்பதில்லை' என்று விறன்மிண்டர் இறைவன்மீது கோபங்கொண்டு. 'இனித் திருவாரூரில் அடிவைப்பதில்லை' என்று கூறித் திருவாரூர்க்கு வடக்கே உள்ள புத்தாற்றங் கரையை அடைந்து சிவபக்தியில் குறையாது வாழ்ந்திருந்தார் என்பது ஒரு வரலாறு. பாரில் ஒரு கால் மிதக்கச் செய்தது - விறன்மிண்டர் திருவாரூர் என்று சொல்லும் அடியாரை மழுவால் வெட்டும் விரதம் பூண்டார்; சிவ பெருமான் அடியவராக வந்து திருவாரூர் என்றபோது விறன்மிண்டர் அவரைத் துரத்த, சிவன் திருவாரூர் எல்லையை அடைந்து 'வந்தோம் இப்பால்' என்றபோது விறன்மிண்டர் ஒரு காலைத் திருவாரூர் எல்லையில் வைத்தார் என்பதைக் குறிப்பது.

பா - ம்: 1. தித்தப். 2. ஈர்ந்த. 3. சீருகண்டு.

82. கணிகண்ணன் - இவர் திருமால் பத்தரும் பெரும் புலவரும் ஆவர். உலகுண்டோனை - காஞ்சிபுரத்தில் எழுந்தருளிய உலகத்தை யுண்டவனுகிய வரதராஜப் பெருமாளை. பாய் - ஆதிசேடனுகிய படுக்கை. சித்தசன் - மன்மதன். தாதை - தந்தை. வரதப்பெருமாள் - வரத ராஜப்பெருமாள்.

பா - ம்: 4. உத்தமசெந். 5. புலவர் மிக்க கணிகணன்மேல். 6. இத்தனையாம் பாடுகின்றோம். 7. சித்தசனன் தாதை. 8. என் றுலகோர் பகரு வாரே.

### தகப்பன் ஒருபாக்கு; பிள்ளை ஒரு தோப்பு

மிகப்பெரிய மாலசுவந் தனைப்பிடித்துக்
கட்டிவந்த வினைப்போர் தன்னைப்
பகற்பொழுதில் பொடியாக்கித் தாதைதனை
வென்றகுசன் பண்பு பாரீர்
செகத்தரசர் புகழவரும் தென்நேம
நாடதிப![1] செயங்கொண் டாரே!
தகப்பனொரு பாக்கெனவும் பிள்ளையொரு
தோப்பெனவுஞ் சாற்று வாரே. 83

### எண்சாண் உடம்பிற்குச் சிரசே சிறந்தது

தண்பரசு ராமனது தாயுடலில்
புலைச்சிதலை தரித்த மின்னாள்[2]
நண்புடனே[3] கொண்டுவர இவள்முழுதும்
புலைச்சியென நகைத்து நாதன்
திண்புயனே! இவளையப்பால் துரத்தெனச்சேய்க்(கு)[4]
உரைத்தனரே செயங்கொண் டாரே!
பண்புளவெண் சாணுடம்பில் சிரசுபிர[5]
தானமெனப் பகரு வாரே. 84

---

83. மால் - திருமால்; இங்கு இராமபிரான். அசுவம் - அசுவ மேதக் குதிரை. வினைப்போர் - சண்டை. தாதை - இங்கு ராமன்; குசன் - லவகுசன் என்பவர்; இவர்கள் சீதையின் புதல்வர்களாம். வான்மீகியின் ஆசிரமத்தில் வளர்ந்து சகல கலைகளையும் கற்றவர்; சிறந்த வீரர். இதன் வரலாறு இராமாயணம் உத்தர காண்டத்தில் விரிவாய்க் காண்க. பாக்கு - கொட்டைப் பாக்கு. தோப்பு - கமுகந் தோப்பு.

பா - ம்: 1. நாடதிபர்.

84. தண் - அருள். பரசுராமனது தாய் - ரேணுகாதேவி. மின்னாள் - பெண். பரசுராமன் தந்தை சொற்படி தாயை வெட்டிவிட்டு வந்தபோது தந்தை 'உனக்கு என்ன வரம் வேண்டும்' என்றார். அப்போது பரசுராமன் 'என் தாய் பிழைக்கும்படி அருள் செய்ய வேண்டும்' என, 'வெட்டிய தலையைப் பொருத்தி அழைத்துக்கொண்டு வா' என்று கூற, ரேணுகாதேவியின் தலை வெட்டுப்பட்ட இடத்தினின்று வேறு இடத்தில் கிடக்க, அதனை அறியாது வெட்டுண்ட ஒரு புலைச்சியின் தலையைப் பொருத்தி அழைத்து வந்தான் என்பது வரலாறு. நாதன் - சமதக்கினி. திண்புயனே - வலிய தோளையுடைய பரசுராமனே. சேய் - பிள்ளை.

பா - ம்: 2. தரித்துமுன்னாள். 3. நண்பரிடம் 4. துரத்தெனச்சொல். 5. சாணுடலில் சிரசேப்ர.

### மூத்தது மோழை இளையது காளை

பார்த்தனுக்கே ரதமூர்ந்தோன் மூத்தபல
பத்திரனைப் பாரைச் சுற்றென்(று)
ஏய்த்தனுப்பித் தன்னைச்சார்ந் தோரைரட்சித்(து)
அண்ணனைச்சார்ந் திருந்து வாழ்ந்த
நூற்றுவரை மடியவுஞ்செய் தான்செயங்கொண்
டாரே ! நீர் நுவலக் கேண்மோ
மூத்ததுவே[1] மோழையென்றும் இளையதுவே[2]
காளையென்றும் மொழிகுவாரே. 85

### தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என்னசெய்வான் ?

பொன்னார்செல் வமும்தமிழும் பொருந்தரசன்
தருக்கதனால் புலவருக்குள்
மன்னான நிரம்பவழ கியரையண்டங்
காக்கையென வழுத்தக் கேட்டே
அன்னார்நீ யேயண்டங் காக்கையென்றார்
செயங்கொண்டார் அணிகொள் நாட்டில்[3]
தன்னாலே தான்மெலிந்தால் அண்ணாவி
என்செய்வான் தரணி மீதே.[4] 86

---

85. பார்த்தன் - அருச்சுனன். ரதம் ஊர்ந்தோன் - யுத்தத்தில் தேரைச் செலுத்திய கண்ணன். பலபத்திரன் - பலராமன்; பலதேவன். பாரை - உலகை. ஏய்த்து - வஞ்சித்து. கண்ணன் மெலிந்து சாகும் நிலையிலுள்ள பசுவைப் பலராமன் மாட்டுப் பட்டி உட்பக்கம் கதவில் கட்டச் செய்து. பலராமன் கதவைத் திறக்கும் போது பசு விழுந்து இறந்தது. இதனால் பலராமன் பூமிப் பிரதட்சணத்திற்குச் சென்றான் என்பதாம். அண்ணன் - பலராமன். நூற்றுவரை - கௌரவரை. மோழை - மடமை; கொம்பில்லாத மாடு. காளை - இளவெருது. நுவல - சொல்ல.

பா-ம்: 1. மூத்ததுவை. 2. இளையதுவை.

86. அரசன் - இங்குப் பாண்டியன் என்பர். மன்னான - பெருமை பொருந்திய. நிரம்பழகியரை - நிரம்பழகிய புலவரை. இவர் சேது புராணம் பாடியவர். அண்டங் காக்கை - கருங்காக்கை; உலகத்தைக் காத்தல். அன்னார் - நிரம்பழகிய புலவர். அண்ணாவி - மூத்தோன். இந்நிகழ்ச்சி மைசூர் அரசரிடம் சென்ற தருமை சம்பந்த சரணாலய சுவாமிகள் வரலாற்றிலும் உள்ளது.

பா-ம்: 3 பொருந்து கம்பர் புகழேந்திப் புலவர் தம்மை, என்மீதில் கவியுரையென் றியம்ப அவர் பாடியதால் இடைஞ்சல் ஆச்சே, பன்னாக மணி செயங்கொண் டாரே! பாக்கியந் தழைந்து படருங் காலம். 4. யோரே.

புகழும் இகழும் என்றும் அறியா

சூத்திரப்பா வையைநிகர்மெய் இதனை நம்பொண்
ணுதெனவும் துணைவன் கல்விக்(கு)
ஆத்துமதத் தஞ்செய்(து)[1] உல குள்ளமட்டும்
புகழ்படைத்தான் அன்றோ நந்தி ?
போற்றியசுந் தரர்க்காய்முன் முறிகாட்டுஞ்
செயங்கொண்டார் புனித நாட்டில்
கீர்த்தியப கீர்த்தியிவை[2] வந்தால்போ
காவெனவே[3] கிளத்து வாரே. 87

வருகிற விதி வந்தால் அனுபவித்தே தீரவேண்டும்

ஆறுரிஷி பத்தினிமார் பழுதுபடா(து)
இருக்கையிலே அன்னோர் ரூபங்[4]
கூறுசுவா காள்எடுத்(து)அக் கினிதேவைத்[5]
தழுவரிஷிக் கூட்டங் கூடிச்
சீறிஅறு வரைத்துரத்தத் தவசுக்கே
கினர்அன்றோ ?[6] செயங்கொண் டாரே !
வாறவிதி வந்ததென்றால் வளைந்தாடும்
பாணையென்று[7] வழுத்து வாரே. 88

---

87. சூத்திரப்பாவை - கயிறு கொண்டு ஆட்டும் பதுமை. நிகர் - ஒத்த. மெய் - உடல் துணைவன் - தம்பி. கல்விக்கு - (நந்திக் கலம்பகம் என்னும்) பாடலுக்கு. ஆத்தும தத்தம் - உயிரை அற்பணம் செய்தல். நந்தி - நந்திவர்ம பல்லவன். இவன் உயிர்விட்ட வரலாற்றைப் புலவர் வாய்க் கேட்டறிக. சுந்தரர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள். முறி - (அடிமை) ஓலை. கிளத்துவார் - சொல்லுவார்.

பா - ம். 1. ஆத்துமாவைக் கொடுத்து 2. கீர்த்தியிரண்டும் 3. காவெனவும்.

88. ஆறு ரிஷி - அத்திரி, ஆங்கீரசன், கௌதமன், அகத்தியன், பரத்துவாசன், காசிபன் என்போர். பழுதுபடாது - கற்பு நெறிதவறாது. ரூபம் - வடிவம். கூறு - (கற்பில் புகழ்ந்து) கூறும். சுவாகாள் - அக்கினி தேவனின் மனைவி. அக்கினி தேவன் சப்த ரிஷிகள் மனைவியர்களைக் கண்டு காதலித்து வந்த சுவாகாதேவி ஆறு ரிஷிகளின் மனைவியரைப்போல வடிவெடுத்து அவனைத் தழுவப் பிறகு வசிஷ்டர் மனைவி அருந்ததி போல வடிவம் எடுத்துத் தழுவ முடியாமல் நின்றாள் என்பதாம். சீறி - கோபித்து. அறுவரை - ஆறு பெண்களையும். வாற - வர (வருகின்ற) எதுகை நோக்கித் திரிந்து வந்தது.

பா - ம் : 4. அவர்கள் ஒப்பின். 5. கினியோனைத் 6. தவசுகெதியென்றடைந்தார். 7. பிரானேயென.

### பத்தினிப்பெண் வாக்குப் பலிக்கும்

நித்தியசந் நியாசியென்றும் நித்தியோப
வாசியென்றும் ரிஷிகள் கூற
அத்தைமெய்யென்(று) அருந்ததியாள் கங்கைதனக்(கு)
உரைத்துவழி அன்பாய்க் கேட்கச்
சித்தமகிழ் அருந்ததிசொற் றனக்குவழி
கங்கைவிட்டாள் செயங்கொண் டாரே!
பத்தினியுத் தமிவாக்குப் பலிக்குமெனத்
தேவரொக்கப் பணிசெய் வாரே.[1] 89

### சாணி ஒருகூடை சவ்வாது ஒரு பணவெடை

மதிமெதுவால் ஒருநூறு வியன்மதியால்[2]
பதினறு வயது புத்ரன்
எதுதருவோ மெனச்சிவனே நல்லபிள்ளை
வயதீரெட்(டு) இருந்தால் போதும்
அதுதருவீர் என்றுமிரு கண்டுமுனி
அன்றுரைத்தார் செயங்கொண் டாரே[3]
இதுசாணி ஒருகூடை மிக்கசவ்வா
தொருபணத்தின் எடையென் பாரே.[4] 90

---

89. ரிஷிகள் கூற - வசிஷ்டரும், விசுவாமித்திரரும் முறையே கூற. கங்கையின் வடகரையில் விசுவாமித்திரர் பசியோடிருக்க, அதனை அறிந்த கங்கையின் தென் கரையில் இருந்த வசிஷ்டர், 'அவருக்கு உணவு கொண்டுபோய்க் கொடுக்க' என்றபோது, அருந்ததி 'கங்கையில் வெள்ளம் பெருகுகின்றதே' எவ்வாறு போவேன் என்றாள். அப்போது வசிஷ்டர்' நித்திய சந்நியாசி வழிவிடச் சொன்னார் கங்காதேவி! வழி விடும் என்று கூற, அவ்வாறே கூறிச் சென்றாள். பிறகு விசுவாமித்திரருக்கு உணவளித்த பின் எவ்வாறு அக்கரை செல்லுவேன் என்றபோது விசுவாமித்ரர் 'நித்தியோபவாசி வழிவிடச் சொன்னார்; கங்கையே வழி விடு என்று சொல்' என அவ்வாறே சொல்லி அருந்ததி வந்தாள் என்பது வரலாறு. அத்தை - அதனை. மெய் - உண்மை.

பா-ம்: 1. தேவர்களும் பணிந்திட்டாரே.

90. மதிமெதுவால் - மந்தபுத்தியால். வியன்மதியால் - கூரிய புத்தியால். எது தருவோம் - எவ்வகைப் பிள்ளை கொடுக்க வேண்டும். என - என்று (சிவபெருமான் மிருகண்டு முனியைக் கேட்க.) சிவனே - சிவபெருமானே. ஈரெட்டு - பதினறு. அது - அந்த நல்ல பிள்ளை.

2. மதியிலியாய் நூருண்டு வியன் மதியாய். 3. என மிருகண்டார் உரைத்தனரே செயங்கொண்டாரே! நாட்டில். 4. ஒரு பணவெடையெனவும் சாற்றுவாரே.

### வல்லவனுக்கு வல்லவன் வையத்தில் உண்டு

சலியாமல் கடல்தாண்டி மருத்துமலை
கொணர்அநுமான்[1] தடந்தோள் தன்னை
நலியாமல் இந்த்ரசித்தன் பாசத்தால்
கட்டிவிட்டான் நலமதாகக்[2]
கலியாண முரசொலிக்குந் தென்நேமச்
செயங்கொண்டார் கனத்த நாட்டில்[3]
வலியார்க்கு வலியாரும் இருப்பரென்றே[4]
உலகிலுள்ளோர் வசனிப் பாரே. 91

### புதுவெள்ளம்வந்து பழைய வெள்ளத்தையும் கொண்டு போயிற்று

மதுரைமன்னன் இடத்திருந்த குதிரைபற்று
தெனவிலைக்கு மாவ னேகம்
இதமுடனே சேகரிக்கும் நிமித்தத்தால்
முன்பரியெலாம் இழந்தான் அன்றோ?[5]
நிதியனைத்தோ ழமைவேண்டுஞ் செயங்கொண்டா
ரே! ஏரி நிரம்ப[6] வேண்டிப்
புதியவெள்ளம் வரப்போய்முன் னிருந்தவெள்ளத்
தையுமிழுத்துப்[7] போன வாறே. 92

---

91. சலியாமல் - வெறுப்பு இல்லாமல். மருத்து - மருந்து. மருத்துமலை - சஞ்சீவிமலை. கொணர் - கொண்டுவந்த. பாசத்தால் - நாகபாசபாணத்தால். நலமதாக - நன்றாக. கலியாண முரசு - மண முரசு வசனிப்பர் - சொல்லுவார்கள்,

பா - ம்: 1. கொணர்ந்தனுமான். 2 நலமதான. 3. முரசொலிசார் நேமச்செயங் கொண்டாரே! நற் கவிதை கூறும். 4. இருப்பரென்று.

92. மதுரை மன்னன் - அரிமர்த்தன பாண்டியன். பற்று என - (அரசாங்கத்திற்குப்) போதாது என்று. மா - குதிரை. அனேகம் - பல. பரி - குதிரை. பாண்டியனிடம் முன்னே இருந்த குதிரைகள் யாவற்றையும் இறைவன் மாணிக்கவாசகருக்காக நரிகளை யெல்லாம் குதிரைகளாகக் கொண்டுவந்து ஒப்படைத்தவை இரவில் நரிகளாய் அவற்றை அடித்துத்தின்று போனதால், அரசன் குதிரைகளை இழந்தான் என்பது வரலாறு. நிதியனை - குபேரனை. தோழமை - நட்பு. 'தனதனற்றோழா' என்பது திருவிசைப்பா.

பா - ம்: 5. முன்னுளபரி எல்லாம் இழந்தான். 6. நிறைக்க. 7. வெள்ளமுமிழந்து.

பகட்டிப் பங்கெடுத்தால் என்ன ? இடியடி பொரியரிசி

தெகுட்டாக்கா தலைவிறகு தலையன்மனை
யாள்கூத்தன்[1] திகிலிட் டேங்கப்
புகட்டியல்லோ கற்பழியா மல்கவிகேட்
டாள்தனது புருடன் பேரில்
முகட்டாலி லையில்துயில்வோன் பணிசெயங்கொண்
டாரே !சீர் முதிர்ந்த நாட்டில்
பகட்டால்பங் கெடுத்தாலென்[2] பொரியரிசி
இடியெனவும் பகர்ந்த வாறே.[3] 93

வேண்டுமென்று நூற்ருல் வெண்ணெய்போல நூற்கலாம்

வாணியின்மா துலன்தோழன் இறவாமல்
காக்கவென்ன[4] வகைசெய் வேனென்(று)[5]
ஆணியிர வியைத்திகிரி யால்மறைத்துப்
பார்த்தனைக்காத் தருளி ஞனே[6]
நாணரவால் பொன்மலையை வளைத்தசெயங்
கொண்டாரே ! நலஞ்சேர் நாட்டில்
வேணுமென்று நூற்ருல்மெல் லியநூலாய்
நூற்றிடுவர் மெய்ய தாமே.[7] 94

---

93. தெகுட்டா - தெவிட்டாத; வெறுப்புக்கொள்ளாத. காதலை-காதற் குறிப்பை. விறகு தலையன் - சக்களவன் என்னும் பெயருடைய விறகு வெட்டி விற்போன். கூத்தன் - ஒட்டக்கூத்தன் என்னும் புலவர். விறகுதலையன் மனைவி ஒட்டக்கூத்தரால் தங்கட்கு ஒருகவி பெற்ருல் உலகில் சிறப்புடன் இருக்கலாம் என்ற எண்ணங்கொண்டு கூத்தரைக் காதல் காட்டித் தன்வீட்டிற்கு வரவழைத்துப் பின்பு தன் கணவனுல் பயப்படுத்தி இதமான வார்த்தை பேசிக் கணவன்மேல் ஒரு கவிதை கேட்டாள் என்பது ஒருகதை. பகட்டு - ஆடம்பரம்.

பா - ம்: 1. யாள் கம்பன். 2. கெடுப்பரெனப். 3. பகரு வாரே.

94. வாணி - சரசுவதி. மாதுலன் - மாமன். வாணிமாதுலன் - இங்குக் கண்ணபிரான். தோழன் - அருச்சுனன். இறவாமல் பிழைக்க-அருச்சுனன் இன்று சயத்திரதனை அத்தமனத்திற்குள் கொல்லாவிட்டால் நெருப்பில் விழுந்து இறப்பேன் என்ற சபதத்தை) அழியால் பாது காக்க. வகை - விதம். ஆணி - (உலகுக்கு) ஆதாரமான. இரவியை - சூரியனை. திகிரி - சக்கரம். கண்ணன் சக்கரத்தால் சூரியனை மறைக்க, பொழுதுபோனதுபோல் ஆக அதை அறிந்த துரியோதனன் மறைத்து வைத்த சயத்திரதனை வெளியே கொண்டுவர, அப்போது அருச்சுனன் அவனைக் கொன்ருன் என்பது வரலாறு. நாண் அரவால் - வாசுகியாகிய கயிற்ருல். பொன்மலை - மேருமலை. வேணும் - வேண்டும்.

பா - ம்: 4. பிழைக்கவென்ன. 5. வோமென்று. 6. ஞரே. 7. நூற்றிடுவராம் பின்னுர் தானே.

### துட்டனைக் கண்டால் தூர விலகு

அச்சமில்லாத் துராக்ருதரா[1] வணைமயில்
ராவணன்சேர்ந் தழிந்து போனான்
பச்சமுள்ள விபீடணன்தான் அரக்கனைவிட்
டொதுங்கிமிகப்[2] பண்பாய் வாழ்ந்தான்
கச்சணியுந் தனத்திசவுந் தரிபாகர்
செயங்கொண்டார் கனத்த[3] நாட்டில்
துச்சனரைக் கண்டவுடன் தூரப்போ
என்றுலகோர் சொல்லு வாரே.[4] 95

### நல்லது கண்டால் நாயனுக்கு என்பார் நல்லோர்

வல்லவர குணன்சோழன் மகளைமணஞ்
செய்தருளி வடிவைப் பார்த்து[5]
அல்லிருக்கும் குழலியிவள் மருதப்பர்க்
காவள்நமக்(கு) அன்னை யென்றே[6]
தில்லைமன்று ளாடி[7]மெய்யில் ஐக்கியமாம்
படிசேர்த்தான் செயங்கொண் டாரே!
நல்லதுகண் டால்நாயன் தனக்கென்றே
உலகிலுள்ளோர் நவிலு வாரே. 96

---

95 துராக்ருதம் - கெட்ட நடத்தை. பச்சம் - பட்சம், அன்பு. அரக்கனை விட்டு - இராவணனை விட்டு விலகி. பண்பாய் - (இராமனைச் சரணாகதியடைந்து) நல்ல பெருமையுடன். கச்சு - வார். தனத்தி - தனங்களையுடையவள். துச்சனர் - துஷ்டர்.

பா - ம்: 1 துராக்கதரா. 2. டொதுங்கிவெகு. 3. கனஞ்சேர் 4. என்றுலகம் சொல்லுந் தானே.

96. வல்ல - சகல வல்லமையுள்ள. வரகுணன் - வரகுணபாண்டியன். வடிவைப்பார்த்து - (முதனாள் படுக்கையறையில் தன் மனைவியின்) உடலழகை நோக்கி. அல் இருக்கும் - மேகம்போல் கறுத்திருக்கும். மருதப்பர்க்கு - திருவிடை மருதூரில் எழுந்தருளிய மருதவாணர்க்கு. ஆவள் - உரியவள் ஆவாள். அன்னை - தாய். "கோயிலின் புகுந்திடை மருதிறைவனைக் கூவி, வாயினைத் திறந்திறைவனும் வரகுண வென்ன, தாயினும் நலமெனக்கிவள் உமக்கிவள் தகுமென்று, ஆயிலுய்க்கு வேன் அல்ல துய்யேனென அறைந்தான்" என்பது திருவிடைமருதூர்ப் புராணம். பின்னர் மருதப்பர் அப்பெண்ணை ஏற்றார் என்பது வரலாறு.

பா - ம்: 5. பார்த்தே. 6. அன்னையாமென்றே. 7. தில்லைமன்றிலாடி.

## செய்தவம் மறந்தால் கைதவம் ஆகும்

அரசிலையில் பாதிபட்சி பாதிமச்சம்
ஆனவிந்தை அனைத்தும்[1] பார்த்து
விரவுளநிட் டையைமறந்த நக்கீரர்
தமைப்[2]பூதம் விழுங்கத் தூக்கித்
திரள்மலையில் அடைக்கவள்ளி கணவனன்றே[3]
விலக்கிவிட்டான் செயங்கொண் டாரே!
உரமுளசெய் தவமறந்தால் கைதவமாம்[4]
என்றவ்வை[5] உரைத்த வாறே. 97

## இடுவதே பிச்சை; பெறுவதே மோட்சம்

அடவியில்வே தியர்க்கொருவே டன்தினைமாப்
பகுத்தபல ஞல்கா சிக்குத்
திடமுளமன் னவன்சேயாய்த் தனையறியப்[6]
பொற்கலத்தில் செனித்தான் அன்றே?[7]
வடவரையைச் சிலையாக வளைத்தசெயங்
கொண்டாரே! வையந்[8] தன்னில்
இடுவதுபிச் சையாம்பின்பு பெறுவதுவே[9]
மோட்சமென இயம்பு வாரே. 98

---

97. அரசு இலையில் - ஒரு அரசமரத்தின் இலையில். பாதிபட்சி - பாதி இலை பறவை வடிவாகவும். பாதிமச்சம் - பாதி இலை மீன் வடிவாகவும். ஆனவிந்தை - ஆன ஆச்சரியம். நிட்டை - தியானம். நக்கீரர் - நக்கீரர் என்னும் சங்கப்புலவர். வள்ளிகணவன் - முருகன். நக்கீரர் பூதத்தின் சூழ்ச்சியில் அகப்பட்டு மலையில் கொண்டுபோய் அடைபட்டபோது திருமுருகாற்றுப் படையைப் பாட முருகன் எழுந்தருளிப் பூதத்தை வென்று நக்கீரர் முதலியோரை விடுவித்து அருள் செய்தார் என்பது வரலாறு.

பா-ம்: 1. யதனைப் 2. டைமறந்துநக்கிரன்தனைப். 3. கணவனன்றே. 4. உரைசெய்தவ மறந்தால் கை தவமாகும் 5. என்றவ்வையார்.

98. அடவியில் - கானகத்தில் (ஒருநாள் இரவு) தினைமாப்பகுத்த - அரைவயிற்றுக்கும் போதாமல்) தினைமாவைப்பகுத்தளித்த. சேய் - பிள்ளை. தன்னை அறியப்பொற்கலத்தில் - (ஒருநாள் இரவு தினைமா அரைவயிறுண்ட பிராமணன்) தன்னை இன்னான் என்பதை அறியப் பொற்றும்பாளத்தில். செனித்தான் - பிறந்தான். அதாவது பிறக்கும் போது குழந்தையைப் பொற்றும்பாளத்தில் ஏந்தினர்கள்; அப்போது அக்குழந்தை சிரித்துத்தன்னை இன்னான் என்று தெரிவித்து யாவர்க்கும் மகிழ்ச்சியூட்டியது என்பதாம். வடவரை - மேருமலை.

பா-ம்: 6. னவன்சேயாத் தினையரியப். 7. அன்றே. 8. வையகர். 9. இடுவ பிச்சை யதனாலே பெறுவதுவும்-

**சாட்சிக்காரனைப் பணிவதிலும் சண்டைக்காரனைப் பணிவதுமேல்**

வாய்ச்சுதெனத் துருவாசர் உருக்குமாங்க
தனைமெத்த வருத்த நேமி[1]
பாய்ச்சலினுல் முனியை[2]வெல்ல வரவுருக்கு
மாங்கதன்தான் பரித்தான் அன்ருே ?
கூச்சமறச் சிலந்திப்பூச் சியைக்கதிசேர்த்
திட்டசெயங் கொண்டார் நாட்டில்
சாட்சிக்கா ரனைப்பணியார் சண்டைக்கா
ரனைப்பணியத் தகுமென் பாரே. 99

**பெரியோர் உள்ளம் பேதிக்கலாகாது**

சிவயோகர்[3] வெகுளியினுல் வரரிஷியும்
மகிடமெனச் செனித்தான் பாரில்
பவமடியால் கற்றஉமை லிங்கப்ரா[4]
ணியைவதைத்த பழியின் தோஷம்
நவதீர்த்த மாடியன்ருே தீர்ந்ததென்ருர்[5]
செயங்கொண்டார் நலஞ்சேர் நாட்டில்
தவமுடையோர் மனமுறியச் செய்யப்படா[6]
தென்றுலகோர் சாற்று வாரே. 100

செயங்கொண்டார் வழக்கம்
முற்றிற்று.

---

*99.* **வாய்ச்சுது** - நல்ல வாய்ப்புக் கிடைத்தது. **துருவாசர்** - துருவாச முனிவர், **மெத்த** - மிக. **வருத்த** - கோபிக்க; துருவாசர் நான் வருவதற்கு முன் எப்படி என்னைவிட்டுத் துவாதசி பாரணை செய்தாய் என்று உருக்குமாங்கதனைக் கோபித்துத் தன் சடையைப் பூமியிலே அடிக்க அப்போது ஒரு பூதம் எழுந்து அரசனை விழுங்கவர, அவன் திருமாலே அபயம் என உடனே சக்ராயுதம் வந்து காத்தது என்பது வரலாறு. **பரித்தான்** - (சக்கிரத்தை எதிர்த்துத் துருவாச முனிவரைப்) பாதுகாத்தான் (அரசன்). **சிலந்திப்பூச்சி** - எட்டுக்கால் சிலந்தி. இது திருவானைக்காவில் பூசித்துச் கோச்செங்கட் சோழனுகப் பிறந்தது.

பா - ம்: *1.* ஆழி, *2,* ரிஷியை.

*100.* **சிவயோகர்** - அகத்தியரையுள்ளிட்ட ஐம்பது தவராஜ யோக ரிஷிகள். **வெகுளியினுல்** - (தங்களை மதிக்காததனுல்) கோபங் கொண்டு. **மகிடம் என** - மகிஷாசூரனுக. **உமை** - உமாதேவி, **லிங்கப் பிராணியை** - சிவலிங்க பூசை செய்த முனிவரை இலிங்கத்தோடு விழுங்கிய மகிடனை. **நவதீர்த்தம்** - திருவண்ணுமலையிலுள்ள ஒன்பது தீர்த்தங்கள்.

பா - ம்: *3* சிவயோகியர். *4,* பவமடியா ரகத்துமைலிங்கப் புரா. *5.* தொலைந்ததென்பார். *6* மனமழுங்கச்செயப்படா.

உ

சிவ சிவ

# செயங்கொண்டார் வழக்கத்தின்

## செய்யுள் முதற் குறிப்பு அகராதி


| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| அச்சமில்லாத ... | 51 | உற்ற செந்நாப் ... | 44 |
| அடவி சென்று ... | 32 | கஞ்சனுக்குப் ... | 25 |
| அடவியில் வேதி ... | 52 | கடலீன்ற ... | 11 |
| அண்ணலருள் ... | 30 | கடிய கனல் ... | 27 |
| அத்தனே ! நீ ... | 42 | கண்ணர் படை ... | 19 |
| அரசன் மகளா ... | 13 | கயிலேத்தாணு ... | 23 |
| அரசிலேயில் ... | 52 | கல்லான ... | 14 |
| அரியோனேக் ... | 6 | காவலன்புட் ... | 36 |
| அருமறை மார்க் ... | 4 | கும்பகர்ணனும் ... | 13 |
| அருமைசெறி ... | ,, | கூச்சமற ... | 38 |
| அறம்பெற்ற சோழன் | 28 | கூறுமரவக் ... | 34 |
| அற்புத ராமன் ... | 19 | கையினிற்பட் ... | 40 |
| அன்பான தரு ... | 22 | கொடியையிரண் ... | 37 |
| ஆச்சரியம் ... | 31 | சம்புகுரு ... | 38 |
| ஆணவத்தக்கன் ... | 24 | சலியாமல் ... | 49 |
| ஆருரெல்லே ... | 44 | சாத்திரவேதியர் ... | 21 |
| ஆவலுடன் பரி ... | 20 | சிந்தை மகிழ் ... | 40 |
| ஆணேப்போல் ... | 12 | சிம்மாசனன் ... | 37 |
| ஆறுரிஷி ... | 47 | சிலேவேளே ... | 2 |
| ஆற்றையணிதே ... | 20 | சிவயோகர் ... | 53 |
| உச்சிதமாய்த் ... | 42 | சீர்பொருந்துந் ... | 1 |
| உலகமெல்லாம் ... | 36 | சுற்றுமதிற் ... | 11 |
| உழுதிளேயான் ... | 5 | சூத்திரப்பா ... | 47 |
| உறுக்குதலும் ... | 14 | செப்பு மரிச்சந் ... | 26 |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| சொல்லோடே | ... | 8 |
| தஞ்சமெனச் | ... | 5 |
| தண்ணுர்மீன் | ... | 35 |
| தண்பரசுராம | ... | 45 |
| தாப்பாய்வாம | ... | 9 |
| திண்மைகழை | ... | 16 |
| திறமுளசஞ் | ... | 28 |
| தெகிட்டாக்கா | ... | 50 |
| தேன்மொழிச்சீ | ... | 15 |
| தொடைக்கிலங்கு | ... | 7 |
| நகரமெல்லாம் | ... | 2 |
| நங்கை கலைவாணி | ... | 8 |
| நயவேந்தன் | ... | 16 |
| நல்வேடவான் | ... | 3 |
| நன்னிலத்திலே | ... | 31 |
| நிசகாளி | ... | 41 |
| நித்திய சந் | ... | 48 |
| நீரெடுத்தோர் | ... | 39 |
| பண்ட கவிகை | ... | 10 |
| பண்டுகிணற்றி | ... | 15 |
| பண்டு குட்டரோ | ... | 18 |
| பண்ணுருங் கவு | ... | 9 |
| பத்தர் கழுத் | ... | 3 |
| பார்த்தனுக்கே | ... | 46 |
| பார்புகழும் | ... | 43 |
| பானுகுலராம | ... | 6 |
| புகழரிச்சந்தி | ... | 29 |
| புள்ளாலே | ... | 10 |
| பூதலமும் | ... | 32 |
| பூமிதனில் | ... | 33 |
| பெண்ணிறக்கத் | ... | ,, |
| பெண்ணை வாழ்க்கை | | 17 |
| பெலமுற்ற சிங் | ... | 35 |
| பேரிலுயர் வாலி | ... | 7 |
| பொன்னுர் செல்வ | ... | 46 |
| மதிமெதுவால் | ... | 48 |
| மதுரை மன்ன | ... | 49 |
| மன்னர் துரோ | ... | 22 |
| மிகப் பெரிய | ... | 45 |
| முனியகலிகை | ... | 25 |
| முன்ஞெரு சோழன் | ... | 18 |
| மெத்தவே நாள் | ... | 43 |
| யாகத்தால் | ... | 41 |
| வணக்கமுடன் | ... | 27 |
| வல்லவர குண | ... | 51 |
| வளமையுள்ள | ... | 26 |
| வள்ளல் கர்ணனின் | ... | 30 |
| வனத்தினில் | ... | 24 |
| வாணிமாது | ... | 50 |
| வாய்ச்சுதெனத் | ... | 53 |
| வாழிரவிசுதன் | ... | 29 |
| விதுரன்வில் | ... | 21 |
| விருப்பமறை | ... | 39 |
| வழியெதிர்நில் | ... | 12 |
| வேணியரனைய | ... | 23 |
| வேய்க்கு மகன் | ... | 34 |

உ

சிவ சிவ

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்
## ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
## அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
## நிறுவிய தருமங்கள்

1. திருமுறை வளர்ச்சிக்கு ஆக
28 தருமங்கள் ... 4,48,500

2. கல்வி அபிவிருத்திக்கு ஆக
48 தருமங்கள் ... 7,49,200

3. சைவசித்தாந்தம் பரப்ப
7 தருமங்கள் ... 1,56,000

4. அன்னதானம் செய்ய
125 தருமங்கள் ... 29,85,800

5. வைத்தியம் செய்ய 5 தருமங்கள் ... 1,22,500

6. பொது தருமங்கள் - ஸ்நானகட்டம், அகதி நன்கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்குகள், பசுப் பரிசு, கோ சம்வர்த்தனம், கல்லெழுத்து முதலிய
65 தருமங்கள் ... 6,10,745

ஆகத் தருமங்கள் 278 ... 50,72,745

| | | |
|---|---|---|
| 29 | திருக்குறள்-அறத்துப்பால் ஹிந்தி மொழி பெயர்ப்பு ... | 1 50 |
| 30 | திருக்குறள்-பொருட்பால் ,, ... | 2 50 |
| 31 | திருக்குறள்-காமத்துப்பால் ,, ... | 1 00 |
| | ஷ 29, 30, 31 சேர்த்து வாங்கினுல் விலை ... | 4 00 |
| 32 | திருக்குறள் தமிழ்மறை குறிப்புரையுடன் ... | 0 75 |
| 33 | முதுமொழி மேல் வைப்பு ... | 0 75 |
| 34 | திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள் ... | 0 37 |
| 35 | திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் மதுரைக் கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனுட்சியம்மை குறம் ... | 2 75 |
| 36 | திருவாரூர் நான்மணிமாலை-முத்துக் குமார சுவாமி பிள்ளைத் தமிழ் ... | 1 25 |
| 37 | சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை-தில்லைச் சிவகாமி யம்மை இரட்டைமணிமாலை ... | 1 00 |
| 38 | பண்டார மும்மணிக்கோவை-காசிக் கலம்பகம்-சகலகலாவல்லி மாலை ... | 1 00 |
| 39 | சிதம்பரச் செய்யுட் கோவை ... | 0 75 |
| 40 | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் ... | 1 00 |
| 41 | தமிழிசைப் பாக்கள் ... | 0 50 |
| 42 | பெரிய புராணம்-உரைநடை ... | 2 00 |
| 43 | திருவிளையாடற் புராணம்-உரைநடை ... | 2 25 |
| 44 | குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும்கந்தர்கலிவெண்பா விளக்கப் படங்களும் ... | 0 50 |
| 45 | அபிராமி பட்டர் பிரபந்தம் (மூலம்மட்டும்) ... | 0 31 |
| 46 | திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் | (அச்சில்) |
| 47 | ,, ,, பொருட்பால் ... | 2 75 |
| 48 | ,, ,, காமத்துப்பால் ... | 1 20 |

**மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள் :—**

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோவில்,
ஸ்ரீ வைகுண்டம் P. O.,

2. " தியாகராஜ விலாசம் " 53, பிள்ளையார்
கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு:-ஷவிற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்

உ

# திருக்குறள் – உரைக்கொத்து

[பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காலிங்கர் உரைகளுடன்]

| | | தனிப்பிரதி. | அஞ்சல் செலவு. |
|---|---|---|---|
| அறத்துப்பால் | (372 பக்கம்) | (அச்சில்) | |
| பொருட்பால் | (816 பக்கம்) | ரூ. 2–75 | 1—09 |
| காமத்துப்பால் | (336 பக்கம்) | ரூ. 1–20 | 0—76 |

(அஞ்சற் செலவு வேறு)

ஒவ்வொரு பாலிலும் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோர்க்கு 20% கழிவு உண்டு.

**நூல்கள் வேண்டுவோர் முன்பணம் அனுப்பவேண்டும்.**

கிடைக்குமிடங்கள் :

1. திரு. **T. M.** குமரகுருபரன் பிள்ளை அவர்கள்
   *B. A., B. L.*, வழக்கறிஞர்,
   ஸ்ரீவைகுண்டம் P.O., (திருநெல்வேலி ஜில்லா.)

2. **தியாகராஜ விலாசம்,**
   53, பிள்ளையார்கோவில் தெரு,
   திருவேட்டீஸ்வரன்பேட்டை,
   திருவல்லிக்கேணி, சென்னை – 5.

3. **பழனியப்பா பிரதர்ஸ்**
   புத்தக வியாபாரிகள்,
   தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி - 2.

4. **மானேசர், ஆர். சி. ஆபீஸ், ஸ்ரீ காசிமடம்,**
   திருப்பனந்தாள் P. O., (தஞ்சை ஜில்லா.)

ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி - 8.